
# தவத்திரு தனிநாயகம் அடிகளார்



மாட்சி நயப்பு மலர்

18-09-1993

# நாயகர் புகழ் நாளும் வாழும்

தேவதிரு மறைப்பணியில் ஆழ்ந்த தூயன்
    தெய்வீகன் இணைமலர்தாள் தோய்ந்த ஞானி
தேமதுரத் தமிழோசை தரணி யெல்லாம்
    தித்திக்கத் தேன்வார்த்த பொதிகைத் தென்றல்
பூமுகத்தைத் தமிழ் செய்து மாநா டாக்கிப்
    புகழ்க்கொடியின் மீதேறிப் பவனி வந்தோன்
மாமகனாம் தனிமகிமை, நாய கத்தை
    மண்ணுலகம் கண்ணெனவே மதித்துப் போற்றும்

ஊரனைத்தும் நம்மூரே மக்க ளெல்லாம்
    உறவினரே என்றுபுறம் புகன்ற போதம்
பாரனைத்தும் பகர்ந்தமைதி பரப்பத் தூது
    பறந்தபுறா தமிழன்னை படைத்துக் காத்த
நாகரீகம் கலையழகு நற்பண் பாடு
    ஞானவொளி இசையமுதல் கனிந்த செல்வன்
பேரறிஞன் முதுமானி நாயகத்தின்
    பெருமைதனைப் பேருலகம் என்றும் பேசும்

பலமொழிகள் நன்காய்ந்து பல்தே சத்தார்
    பாராட்டுந் தமிழ் வளத்தின் பரப்புக் காட்டி
இலகுகலைக் கழகங்கள் அரங்கி லேறி
    இருந்தமிழின் பெருந்தகைமை முழங்கி நின்றோன்
நலங்குறைந்து கண்கள்பஞ் சடைத்து கால்கள்
    நடமாட முடியாது தளர்ந்தும் வாழ்விற்
பலமழியாத் தமிழ்பற்றைப் பற்றி வாழ்ந்தோன்
    பைந்தமிழின் தந்தைபுகழ் நாளும் வாழும்

# தவத்திரு தனிநாயக அடிகளார் மாட்சி நயப்பு விழா

**திருக்கோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபம்**
**18-09-1993 சனிக்கிழமை மாலை 4-30 மணி**

*தலைமை*

**திரு. நா. புகேந்திரன்** *அவர்கள்*
*திருமலை மேலதிக அரசாங்க அதிபர்*

*முதன்மை விருந்தினர்*

**மேதகு ஜோஸப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை**
*திருமலை-மட்டுநகர் மறைமாவட்ட ஆயர்*

*சிறப்பு விருந்தினர்*

**திரு. சொ. கணேசநாதன்** *அவர்கள்*
*வடக்கு கிழக்கு மாகாணசபை பிரதம செயலர்*

*நிகழ்வுகள்*

1. மங்கள விளக்கேற்றுதல்
2. வரவேற்புரை: **அருட்திரு *T.* பயஸ் பத்மராஜா அடிகளார்**
   *தனிநாயக அடிகளார் மாட்சி நயப்புக் குழுத்தலைவர்*
3. தலைமையுரை
4. 'மாட்சி நயப்பு மலர்' வெளியீடு
5. முதன்மை விருந்தினர் உரை
6. சிறப்பு விருந்தினர் உரை

7. சிறப்புரைகள்

அ) திரு. க. சண்முகலிங்கம் அவர்கள்
இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர்

ஆ) புலவர் *A. W.* அரியநாயகம் அவர்கள்
I. S. A. நெடுந்தீவு

இ) கலாநிதி *M. A.* நுஃமான் அவர்கள்
பல்கலைக் கழக விரிவுரையாளர்

ஈ) கலாநிதி ''இலக்கியச் செம்மல்''
*S.* தில்லைநாதன் அவர்கள்
பல்கலைக் கழக பேராசிரியர்

8. <u>கலை நிகழ்ச்சிகள்</u>

அ) இலக்கிய நாடகம்
தி/மெதடிஸ்த மகளீர் கல்லூரி மாணவிகள்

ஆ) நாட்டிய நாடகம்
தி/புனித மரியாள் கல்லூரி மாணவிகள்

இ) சமூக நாடகம்
கலைவாணி நாடக மன்றம்

ஈ) புராண நாடகம் புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்கள்

9. நன்றி மறப்பது நன்றன்று

– தாபி சுப்பிரமணியம்



## திருக்கோணமலை - மட்டுநகர்
## மறை மாவட்ட ஆயர் அவர்களின்
# ஆசியுரை

தமிழ்த்தூது தனிநாயக அடிகள் தமிழியல் வரலாற்றில் மறக்க முடியாத ஒருவர். அண்மைக்கால 'தமிழ் ஆய்வுப்போக்கை நெறிப்படுத்தி நிர்ணயித்ததில் பெரும் பங்கு இவருக்குண்டு.

இவர் சிறந்த அறிவாளியாகவும், அனைத்துலகரீதியில் புகழ்பெற்றவராகவும் இருந்தும் தாழ்மைப்பண்பு கொண்டவராக விளங்கியதைத் தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன்.

தனது துறையில் - இலட்சியத்தில் தளராத ஆர்வமும் விடாமுயற்சியும் கொண்டவர். எண்ணித்துணிந்து எடுத்த முயற்சிகளிலெல்லாம் வெற்றி வாகை சூடியவர்.

உடல் நலமற்று நடக்க முடியாதிருந்த நிலையிலும் பல்கலைக்கழக மாணவர்களின் பரீட்சைத் தாள்களைத் திருத்திக் கொண்டிருந்ததைக் கண்டிருக்கிறேன். இந்த ஆர்வமும் பண்பும் போற்றத்தக்கவை.

இறைபணியாளராகவும், தமிழ்த்தூதராகவும், ஒருங்கிணைந்து பணியாற்றிய தனிநாயக அடிகளின் வாழ்க்கை எதிர்காலத் தலைமுறைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

இத்தகைய பேரறிஞர் நினைவாக விழா எடுப்பதனையிட்டும், சிறப்பு மலர் வெளியிடுவதனையிட்டும் மகிழ்கிறேன் - வாழ்த்துகிறேன்.

**பேரருட்திரு ஜோஸப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை.**
திருக்கோணமலை - மட்டுநகர்,
மறைமாவட்ட ஆயர்.

# வடக்குக் கிழக்கு மாகாண பிரதம செயலரின்

# ஆசியுரை

## தனிநாயக அடிகள் தனிநாயக மானவர்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் எனப் பாரதி கண்ட கனவை நனவாக்கியவர் தனிநாயக அடிகளார். 20ம் நூற்றாண்டில் தமிழ் வளர்ச்சி பற்றிச் சிந்திக்கும் எவரும் தனிநாயக அடிகளாரின் சாதனைகளையிட்டுப் பிரமிப்பு அடையாமல் இருக்க முடியாது.

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ( IATR ) நிறுவியமை அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடாத்தியமை, தமிழ்ப்பண்பாடு (Tamil Culture) காலாண்டிதழ் வெளியிட்டமை முதலிய ஒவ்வொன்றுமே தமிழ் வளர்ச்சிப் பாதையில் மைல்கற்களாகும். தனிநாயக அடிகளாரின் மறைவுக்குப் பின் இம்முயற்சிகள் தொடராமையை நோக்கும் போது அவரது தனிப் பட்ட ஆளுமையும், ஆற்றலுமே இம்முயற்சிகளுக்கு ஆணிவேராக அமைந்தன என்று எண்ணத் தோன்றுகிறது.

தமிழ் மொழியாலும், தமிழ் இலக்கியத்தாலும் கவரப்பட்ட பல கிறீஸ்தவப் பாதிரிமார்களையும், ஆங்கில அறிஞர்களையும் நாம் அறிவோம். ஒப்பிலக்கணம் தந்த கால்ட்வெல் அடிகள் '' தேம்பாவணி '' தந்த அருட்தந்தை பெஸ்கி (வீரமாமுனிவர்) ஒரு தமிழ் மானவன் " எனத் தன்னைக் கூறிக் கொண்ட போப் ஐயர். தமிழ் இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மேல் நாட்டவர்களுக்கு அறிமுகப்படுத்திய மாக்ஸ் முல்லர் முதலியோரை நாம் வரலாற்றில் சந்தித்திருக்கிறோம். ஆனாலும் அவர்கள் ஆற்றிய தமிழ்ப்பணியை விடத் தனிநாயகம் அடிகளார் ஆற்றிய தமிழ்ப் பணி அளப்பரியது என்று கூறினால் அது மிகையாகாது.

'' இஸ்லாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி '' எனக் கூறும் இஸ்லாமிய சகோதரர்களை நாம் பார்க்கிறோம். அவ்வாறே தமிழை உயிராக மதித்து, அதற்குத் தனது வாழ்க்கையே அர்ப்பணித்தவர் தனிநாயக அடிகளார். ஈழத்திருநாட்டில், யாழ்ப்பாணபகுதியில் ஒரு சிறுதீவில் பிறந்த நம்மவர் ஒருவர் கடல் கடந்து மலேசியா தேசம் சென்று, அங்கிருந்தே தமிழோசை உலகின் எட்டுத்திக்குகளிலும் ஒலிக்கச் செய்தார் என்பது நாம் எல்லோரும் பெருமைப்படவேண்டிய விடயம். பெருமைப்பட்டால் மட்டும் போதாது தகுந்த நன்றிக்கடன் செலுத்த வேண்டும். அவர் ஆற்றிய கடல் கடந்த தமிழ்ப்பணிகள் நமது இளம் தலைமுறையினருக்கு ஆதர்சமாகவும் உந்து சக்தியாகவும் அமைய வழி சமைக்க வேண்டும். ஆம் அதை நாம் செய்ய வேண்டும் தனிநாயக அடிகளார் நினைவுப் பணி மன்றம் அப்பணியை தகுந்த முறையில் திட்டமிட்டுச் செய்ய வேண்டும். ஆறுமுகநாவலர் சுவாமி விபுலாநந்தர் தமிழினத்தின் இதயத்தில் இடம் பிடித்தது போல் தனிநாயக அடிகளாரும் இடம் பிடிக்க வேண்டும். அதற்கேற்ப அவரது நினைவுப் பணிகளை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அவர் ஆரம்பித்து வைத்த சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மன்றம், சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தமிழ்ப்பண்பாடு பருவ ஏடு சிறிய அளவிலாயினும் தொடர வேண்டும்.

தனிநாயக அடிகளாரின் தமிழ்ப்பணி பன்முகப்பட்டது தமிழ்ஆய்வு, தமிழ்ப்பயிற்சி, தமிழ்த் தூது, நூல்வெளியீடு, சொற்பொழிவு, எனப் பல்வேறு வழிகளில் அவர் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார் அவர் நடாத்திய ஐந்து தமிழ் மாநாடுகளும், தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டும். விழாமலர்கள், கட்டுரைத் தொகுப்புகள் பரவலாக்கப்படவேண்டும். பல்கலைக்கழகங்களும், பேராசிரியர்களும் இப்பணிகளில் முழுமையான பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

அடிகளார் மறைந்த செப்டம்பர் முதல் தேதி (1980) ஆண்டு தோறும் நினைவுதினமாகக் கொண்டாடப்பட வேண்டும். கலாநிதி வே. அந்தனிஜான் அழகரசன் எழுதிய '' தனிநாயக அடிகளின் வாழ்வும் பணியும் '' என்ற நூலில் அவர் ஆற்றிய பணிகளும், ஆற்றவிருந்த பணிகளும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. (பக்: 127-138) இவை. அடிகளாரின் நினைவுப்பணிமன்றம் மேற் கொள்ளக் கூடிய சிலவேலைத் திட்டங்களுக்குத் துணை செய்யக் கூடும்.

நினைவுப் பணி மன்றமும், அதன் தலைவரான அருட் தந்தை பயஸ் பத்மராஜா அவர்களும், மேற்கொள்ளும் தவம் பலிதமாக எனது உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

சொ. கணேசநாதன்

பிரதம செயலாளர் செயலகம்,
திருக்கோணமலை.

# வடக்கு கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சுச் செயலாளரின்

# ஆசியுரை

தமிழின் சிறப்பினைத் தரணியெங்கும் எடுத்துரைத்த தவத்திரு தனிநாயகம் அடிக ளாரின் மாட்சி நயப்பு மலருக்கு ஆசியுரை அளிப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன்.

தனிநாயகம் அடிகளார் தனித்துவமானவர். தமிழ் வளர்க்கும் தமிழகமே, துணியத் தயங்கிய விடயத்தில் தனி நாயகமாக, தனித்து நின்று உலகெங்கும் தூது சென்று தமிழ்மொழியை, அதன் பாரம்பரியத்தை, அதன் பண்பாட்டை வேற்று நாட்டவருக்கு விளங்கச் செய்து, தமிழின்மேல் பிற நாட்டாரைக் காதல் செய்ய வழி சமைத்து நின்றவர் தனிநாயகம் அடிகளார்.

எங்கள் கலாசாரம், பண்பாடு இன்னும் ஓங்கி வளர, தனிநாயகம் வழி தமிழறிஞர் அனைவரும் பின்பற்ற வேண்டிய வழியாகும்.

தமிழினம் என்றுமே மறக்க முடியாத அறிஞர் பெருமக்களில் முதன்மை வகிப் பவர் 'தனிநாயகம்-அடிகளார் என்றால் மிகையாகாது'.

தமிழ் வளர்த்த பெரியார்களை, இன்றைய இளம்பராயத்தினர் நன்கு அறிய வேண்டும். உரிய உரிய காலங்களில் உரிய உரிய முறைப்படி விழாக்கள் மூலம் பெரியார்களின் பணிகள் எடுத்தோதப்பட வேண்டும்.

இந்த வகையில்......

தமிழ்த்தூதுவர் தனிநாயகம் அடிகளாரின் மாட்சிமையை நயக்கவென விழா எடுக்கும் பெரியார்களை வாழ்த்துவதோடு, விழாவும் மலரும் வெற்றிபெற என் ஆசிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

எம். ஏ. சி. முகைதீன்
செயலாளர்

# வடக்குக் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளரின்

# ஆசியுரை

இந்துமதத்தின் உலகத் தூதுவர் சுவாமி விவேகானந்தர் என்றால், தமிழ்மொழியின் உலகத்தூதுவர் சுவாமி தனிநாயகம் அடிகளார் ஆகும்.

சுவாமி விவேகானந்தரின் சிக்காக்கோ பேருரையின் நூற்றாண்டு நினைவு வேளையில் சுவாமி தனிநாயகம் அடிகளாரின் மாட்சி நயப்பு விழா நடைபெறுவது சாலப் பொருத்தமானதாகும்.

தமிழ் வளர்க்கும் தமிழகம் பெறாத வாய்ப்பினை நமது ஈழத்திற்கு பெற்றுத் தந்து உலகளாவிய அளவில் தொடர்ச்சியாக ஐந்து தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்தி தமிழின் மாட்சியை -அதன் வனப்பினை -ஏனைய மொழி அறிஞர்களுக்கு எடுத்துகூறிய பேரறிஞர் பெருந்தகை தனிநாயகம் அடிகளார்.

''தேன்மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்று புரட்சிக்கவி பாரதி கண்ட கனவை, நனவாக்கி செயலாக்கி,

''என்னை இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்ற திருமூலரின் விருதுவாக்கை நிறைவேற்றியவர்.

மொழியின் மாட்சி வெளிப்பட்ட 'தமிழ் பண்பாடு' என்ற சஞ்சிகையை தனித்து நின்று நடாத்தி உலகலாவிய மொழி அறிஞர்களை தமிழ்மேல் காதல் கொள்ள வைத்ததோடு, பல்மொழி அறிஞர்களை தமிழ்மொழியின் பேரால் ஒன்றிணைப்பதிலும் வெற்றி கண்டவர் தனிநாயக அடிகளார்

அன்னாரின் வாழ்வும் பணியும் இன்றைய இளம் தலைமுறையினர்க்கு நல்லதொரு எடுத்துக்காட்டு.

அன்னாரின் மாட்சி நயக்கவென எடுக்கப்படும் விழா சிறப்புற வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

க. தியாகராஜா
மாகாணக் கல்விப்பணிப்பாளர்

# வடக்குக் கிழக்கு மாகாண கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு உதவிப் பணிப்பாளரின்

# ஆசியுரை

தமிழ் மொழியின் சிறப்பினையும், தமிழினத்தின் மேன்மையையும் உலகெங்கணும் பரப்புதற்குத் தன் வாழ்நாளிற் பெரும்பகுதியினைச் செலவிட்டவர் நம் தனி நாயகம், அடிகளார். உலகின் பல்வேறு நாடுகளில் மாநாடுகள் கூட்டி, உலகளாவி வாழும் தமிழினத்தை ஒன்று கூட்டிய பெருமையும் தனிநாயகம் அடிகளாருக்கே உரிய தாகும். உலகத் தமிழாராய்ச்சிக் கழகம், 'உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள்' 'முத்திங்கள் ஏடுகள்'என்று, பல அழியாச் சின்னங்கள் மூலம் தமிழ்ப்பணியை மேற் கொண்டார்.

அனைத்துலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் ஸ்தாபகராகவும், பொதுச் செயல ராகவும் பேராசிரியர் தனிநாயகம் அடிகள் விளங்கினார். முதலுலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை மலேஸியாவின் தலை நகராம் கோலாலம்பூரில் நடத்துவதற்கு அடிகளார் பெரிதும் முன்னின்று உழைத்தவர். இவ்விதம் தமிழன்னைக்கு திருமூலருடைய வாக்கான,

"என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்பதனை மனதிலே இருத்திக் கருமமாற்றியவர். தனிநாயகம் அடிகளார். இம்மகானின் நினைவாக கொண்டாடப்படும் விழாவின் போது வெளியிடப்படவுள்ள மாட்சி நயப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைவதோடு தனிநாயகம் அடிகளார் காட்டிய வழியில் மாணவர் சமுதாயம் ஈடுபட்டு, ஆக்க பூர்வமான பணிகளைச் செய்வதே அடிகளாரது கனவு நிறைவேற வழிவகுக்கும் செயலாகும். விழா சகல வழிகளிலும் சிறப்புற நல்லாசி கூறுகின்றேன்.

**வாழ்க அடிகளாரின் நாமம்.**

**எஸ். எதிர்மன்னசிங்கம்.**
**உதவிப்பணிப்பாளர்**

# திருக்கோணமலை மேலதிக அரச அதிபரின்

# ஆசியுரை

''என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என்ற திருமூலருடைய வாக்கிற்கு வடிவம் கொடுத்தது போல் வாழ்ந்தவர் எமது தனிநாயக அடிகளார் அவர்கள்.

''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்''

என்ற பாரதியின் கனவை நனவாக்கத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த ஓர் ''உலகத் தமிழ்க் குடிமகன்'' எமது அடிகளார் ஆகும்.

தமிழ் நாட்டில் தோன்றிய எத்தனையோ தமிழ் பேரறிஞர்கள் இருக்கையில் எமது நாட்டு அடிகளாரே முதன் முதல் தமிழிற்கு உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கூட்டி எமது தமிழன்னையின் பெருமையை உலகறியச் செய்தார். எனவே அவரது பணிகள் எம்மால் மறந்து விடக்கூடிய தொன்றா?

''தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை''

பாவேந்தன் பாரதிதாஸனின் கூற்றிற் கிணங்க, அடிகளாரின் உடம்புதான் எம்மிடம் இல்லை. ஆனால் அடிகளார் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.

அவரின் வாழ்க்கை, பணி, சாதனைகள் என்பன இன்றைய எமது சமுதாயம் அறிந்து உள்ளத்தால் போற்றி அவர் வழியில் தொடர்ந்து பின்பற்றிச் செல்ல முயலவேண்டும்.

நா. புவனேந்திரன்
மேலதிக அரச அதிபர்

**ST. MARY'S CATHEDRAL,**
**TRINCOMALEE.**

## நினைவுக் குழுத் தலைவரின்
## ஆசியுரை

நீண்ட நாள் இடைவெளிக்குப் பின் திருக்கோணமலையில் ''சுவாமி தனி நாயகம்'' அடிகளார்க்கு விழாவெடுக்கிறோம்.

''தேன் மதுரத் தமிழோசை உலகமெலாம் ஒலிக்க வேண்டும்'' என்ற புரட்சிக்கவி பாரதியின் கனவை நனவாக்கிய பெருமை அடிகளாருக்கே உரித்தானதாகும்.

கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் மறைந்த தமிழ்ச் சங்கத்தை இருபதாம் நூற்றாண்டில் மீண்டும் கூட்டி, காலத்தால் அழியாத தமிழுக்குத் தொண்டாற்றி, மெருகூட்டி வளர்த்த வள்ளல் இவர்.

ஈழத்துச் சிறப்புத் தமிழ் மகனாக தமிழ்மொழி கலை, கலாசாரம் முதலியவற்றுக்கு மெருகூட்டி, அழகுபடுத்தி அதன் மூலம் உலகெங்குமுள்ள ஒவ்வொரு தமிழ் நெஞ்சங்களுக்கும் பெருமை தேடித்தந்தவர் அடிகளார் அவர்கள்.

தமிழ் உள்ள வரை தனிநாயகம் அடிகளாரின் பங்கும் பணியும் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் நினைவு கூரப்படல் வேண்டும் என்ற தூய நோக்குடன் ''மாட்சி நயப்பு விழா'' எடுக்கப்படுகிறது.

மாறிவரும் உலகமதில் தமிழ்மொழியும் உரையும், நடையும் மாறுவது இயல்பு, இப் பணிகளைத் தொடர பலர் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, விழாச் சிறப்புற, மலர் சிறப்புற உதவிய அனைவருக்கும் நிறையாசி கூறுகிறேன்.

தலைவர்
அருட்திரு. T. பயஸ் பத்மராஜா அடிகளார்.
நினைவுக்குழு, திருக்கோணமலை.

# ஓரினத்தவர்...

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசுகள் வெவ்வேறு அரசுகளாக இயங்கத் தமக்குள் சில வேளைகளில் போரில் ஈடுபட்டிருந்த போதிலும் தாம் அனைவரும் ஓரினத்தைச் சார்ந்தவர்கள் என்றும் தமிழ் மொழியை இணைப்பாகவும் கருதி வந்தனர்.

பெருநில மன்னரும் குறுநில மன்னரும் தம் எல்லைக்குள் அரசு செலுத்தி வந்தாலும் தம்மனைவரின் நாட்டையும் தமிழகமென்றும் பொதுமை காட்டிய மூவருலக மென்றும் அழைத்தனர். தமிழ்மொழியே அன்னாருடைய ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்தது.

---

மொழிக்கும் மறைக்கும் முழுமையுற
முற்றிய பணிகள் செய்திட்ட
முழுமைத் தமிழ்நா யகமான
மெய்த்தனி நாயக அடிகளின்
விழுமிய பணிகளின் பான்மையினை
விருப்புடன் அறிந்து ஆராய்ந்து
பொழுதும் மகிழ்ந்து பாராட்டல்
பொற்புத் தமிழர் கடனாகும்

தனிநாயகம் அடிகள்

# தமிழர் பண்பாட்டின் கோட்பாடுகள்

## முதுமுனைவர் தவத்திரு தனிநாயகம் அடிகளார்

தமிழர் பண்பாட்டின் குறிக்கோள்கள் சிலவற்றைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன். அவற்றை நம் இலக்கியங்கள் பலவற்றில் தெளிவாகக் காணலாம். பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை. ஆதலால்தான், புறநானூற்றில் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றும், வள்ளுவத்தில் ''யாதாயினும் நாடாமல் ஊராமல்'' என்றும் குறிப்பிட்டுள்ளன.

விருந்தோம்பல் ஒரு சிறந்த கொள்கை. பிறரன்பு, ஈகை, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனும் கோட்பாடு, என்கடன் பணி செய்து கிடப்பதே, அகத்திணை புறத்திணை மரபு, மானமென்றால் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத்தூய்மை, விடாது முயலல் எனும் கொள்கை, ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற நிகரற்ற மனநிலை, ''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்னும் உயர்ந்த இலட்சியம், என்பன தமிழர் பண்பாட்டின் அரிய்சில கோட்பாடுகளென்றே கூறலாம்.

இவ்விலட்சியங்களைத் தமிழ் இலக்கியங்களில் பன்முறைத் தேற்றம் கொடுத்து வற்புறுத்துவதைக் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக புறநானூற்றில் வரும் 'உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற செய்யுளும் 'இம்மைச் . ாவது மறுமைக்காமென ' என்ற செய்யுளும் குறிப்பிடத்தக்கவை.

நம் இலக்கியங்களை நன்கு ஆராய்ந்தால் அவை பண்பாட்டுத் துறைகளை நன்கு பயன்படுத்துவதைக் காண்கின்றோம். தொல்காப்பியர், கருப்பொருளில் பண்பாட்டுத்துறைகள் சிலவற்றைக் கூறுகின்றார். அவற்றின் வழிபாடும், இசையும், இசைக்கருவிகளும் சில. அகத்திணையியலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> '' தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவும் கருவென மொழிப ''

இவ்வாறே பண்பாட்டின் கொள்கைகளும், இலட்சியங்களும் எக்காலத்து இலக்கியங்களிலும் கூறப்பட்டுள்ளன.

தமிழர் பண்பாடு கால அடைவில் மாற்றங்கள் அடைந்துள்ளதா எனும் வினாவிற்கு மாற்றம் அத்துணை அடைந்ததில்லை, ஆனால் வளர்ச்சி அடைந்துள்ளது எனறே கூறுதல் வேண்டும். வட ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர், ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை.

பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், பத்தரும் ஐரோப்பிய கிறீஸ்தவரும், மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர் இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம் பெற்றன. வடமொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்களை வடமொழியில் கொண்டுள்ளன.

சுநீதிகுமார் சட்டர்ஜீ, இந்தியப் பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு - திராவிடப் பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். சமணரியற்றிய சிலப்பதிகாரமும், புத்தரியற்றிய மணிமேகலையும் வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணியும், உறுப்புலவர் இயற்றிய சீராப்புராணமும் ஆராயுங்காலை

இவர்கள் தம் சமயங்களில் கோட்பாடுகளைக் கூறினாலும், தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுள்ளார் என்பதும் புலனாகிறது.

இவைநிற்க, தமிழர் பண்பாட்டின் சிறப்பு இயல்புகள் சிலவற்றை ஒருசிறிது ஆராய்வோம்.

## தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கை விருது வாக்கு

தனிநாயக அடிகளார் 1938 இல் உரோமை நகரில் குருப்பட்டம் பெற்ற பொழுது தம்வாழ்க்கையின் விருதுவாக்காக, மேல்வரிச் சட்டமாக, ஆங்கில நாட்டறிஞர் 'ட்ருமாண்ட்' *(Drumond)* என்பவரின் பொன்மொழியைத் தெரிந்து கொண்டார், அதன்படி வாழவும் உறுதி பூண்டார்.

"நான் இவ்வுலகில் ஒருமுறைதான் பயணம் செய்வேன். எனவே மரணம் வந்து என்னைத் தழுவுமுன் என்னாலான எல்லா நல்ல செயல்களையும் செய்ய முனைவேன் ஏனெனில் இந்த உலக வழியாக நான் மீண்டும் இன்னொருதடவை வரப்போவதில்லை"

*"I shall pass this way but once Therefore, before I die let me do all the good I can, because I shall not pass this way again." (Drumond)*

இந்த விருது வாக்குடன் திருமூலரின் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்ற பொன்மொழியையும் தம் வாழ்க்கையின் விருதுவாக்காகச் சேர்த்துக்கொண்டார்.

### உலக மனப்பான்மை

பண்டைக்காலந் தொடங்கி, தமிழ் மக்கள் மேற்றிசை நாடுகளோடும், கீழ்த்திசை நாடுகளோடும், இந்தியாவின் வடபாகத்தோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் தமிழ்நாட்டின் பட்டையும், மிளகையும் முத்தையும் இன்னும் பல பொருட்களையும் உலகம் விரும்பியுள்ளது.

தமிழ்நாட்டின் புவியியல் அமைப்பு அதனைப் பண்டமாற்றத்துக்கு ஏற்றவாறு அமைத்துள்ளது. கீழ்த்திசை நாடுகளுக்குச் செல்ல வேண்டிய மேற்றிசைப் பண்டம், தமிழ்நாட்டில் இறக்கப்பட்டு வேறு மரக்கலங்களில் கீழ்த்திசை நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. இவ்வாறே கீழ்த்திசைப் பண்டமும் தமிழ்நாட்டில் வைத்து மரக்கலங்களில் மேற்றிசை நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. மேற்றிசை நூல்களே சங்க இலக்கியத்தைப் போல் இவ்வணிகத்திற்குச் சான்று தருகின்றன. எனவே, இத்தாலிய நாட்டில் வாழ்ந்த ஸ்டொயிக் வாதிகள் உரோமைப் பேரரசு காலத்தில் எவ்வாறு ஓர் உலக மனப்பான்மையை வளர்த்தார்களோ, அவ்வாறே சங்க காலத்திற்கு முற்பட்ட காலந் தொடங்கி ஓர் உலக மனப்பான்மை தமிழ் நாட்டில் பரவியுள்ளது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்றும் "யாதானும் நாடாமல் ஊராமல்" என்றும் கூறுவதற்கு இம்மனப்பான்மை ஊக்கமளித்தது.

மேலும், சமணம், புத்தம் போன்ற சமயங்களும் தமிழ்நாட்டில் வரவேற்கப்பட்டதால் இம்மனப்பான்மை விரிவாகியது. பார்ப்பனர், மொழிபெயர் தேயத்தார், யவனர், புலம்பெயர் மக்கள், தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்து வந்தார்கள். இம்மனப்பான்மை ஒரு சில காலங்களில் சமயக் காழ்ப்பால் மாசு அடைந்ததாயினும், அது எக்காலத்திலும் தமிழ் மக்களிடம் வளர்ந்தே வந்துள்ளது.

பிறமக்களின் நலத்தைக் கருதும் பண்பு, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்னும் தன்மை இச்சிறப்பை மேலும் வளர்த்தது. இம்மனப்பான்மை வடஆரியர், கிரேக்கர் போன்றோருடைய பண்டைக் கொள்கைகளுடன்

முரண்பட்டேயிருந்தது. பிளாட்டோ, அரிஸ் டோட்டல் போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும், பிறமக்களை நாகரீகம் அற்றவர்கள் என்றும் கூறி வந்தனர். வட ஆரியர் இமயமலைக்கும், விந்திய மலைக்கும் இடையேயுள்ள நிலம்தான் புண்ணிய பூமி என்று கருதினர்.

## கண்ணோட்டம்

உலக மனப்பான்மையில் தோன்றிய வேறொரு இயல்பினை கண்ணோட்டமென்று அழைக்கலாம். தமிழ்நாட்டிற்கு அப்பாலிருந்து வந்த சமயங்களெல்லாம், தத்துவங்களெல்லாம் தமிழ்நாட்டில் தடையின்றிப் போதிக்கப்பட்டன. பெரும் விழாக்களில் தத்துவவாதிகள், சமயவாதிகள் தத்தம் கொடிகளைப் பறக்க விட்டுத் தம் கருத்துக்களைப்பற்றி உரை நிகழ்த்தினர். திருவள்ளுவர் தம் கருத்துக்களைப் பல மூல நூல்களிலிருந்து எடுத்திருக்க வேண்டும். சங்க நூல்கள் பல்வேறு கருத்துக்களுடைய புலவர்களின் இலக்கியப் படைப்புகளைக் கொண்டுள்ளன. சமணராகிய இளங்கோ அடிகள் தமிழர் தழுவிய பழக்கவழக்கங்களையும், வழிபாட்டு முறைகளையும் விரித்துக் கூறியுள்ளார்.

சமணரும், புத்தரும் இசைக்கலை, நடனக்கலை, போன்ற கலைகளை வெறுத்தாராயினும், இளங்கோ அடிகள் திருத்தக்கதேவர் போன்றோர் தமிழ்க்கலைகளை நன்கு விரித்துக் கூறியிருக்கின்றனர். திருவள்ளுவர் சமணராக இருந்திருப்பார் என்ற கூற்றுக்கு அவருடைய காமத்துப்பாலும் இல்லத்தைப் போற்றும் முறையும் முரண்பாடாக இருக்கின்றன நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணிக்கு உரையெழுதியது போல் சமணர் எனக்கருதப்படும் இளம்பூரணார், அகத்திணையியலுக்கு உரை எழுதியுள்ளார்.

இடைக்காலத்தில் வைணவர், சைவர், ஆகிய பார்ப்பன உரையாசிரியர் சமண நூல்களை, எத்துணை ஆர்வத்துடன் அவை இலக்கிய நூல்களெனக் கருதி, அவற்றின் மூலங்கட்கு நுட்பமான உரைகளை எழுதியிருக்கின்றனர். பிற்காலத்தில் சமய சமரசக் கீர்த்தனைகள் என்றும், சமரசக் கொள்கைகள் என்றும், எங்கு உண்மையும் அழகும் உள்ளதோ அங்கிருந்து கருத்துக்களை நூலாசிரியர்கள் எடுத்துத் தந்திருக்கின்றனர். பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை, திருக்காவலூர் கலம்பகத்தைப் பற்றியும், தேம்பாவணியைப்பற்றியும், சீறாப்புராணத்தைப்பற்றியும் தந்த கருத்துக்களைப் போல் வேறு எவரும் எழுதியாக நான் அறியேன். திரு. வி. கலியாணசுந்தர முதலியார், கிறிஸ்துவின் அருள்வேட்டல், புத்தரின் அருள்வேட்டல் போன்ற இலக்கியங்களைப் பாடி இன்புற்று வாழ்ந்தார். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை யேசுவைப்பற்றி' புத்தரைப்பற்றிப் பாடியுள்ளார்.

---

## துறந்தும் துறவாதவர்

"கண்கள் பஞ்சடைந்து போகின்றது கால்கள் நடக்க மறுக்கின்றன. ஆனால் தமிழ்ப்பற்று இன்னும் என்னோடிருக்கிறது"

- தனிநாயக அடிகள் -
(வேலணையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டில்

---

# பன்மொழிப் புலவர் தனிநாயக அடிகள்

தமிழ், ஆங்கிலம், ஹீபுரு, லத்தின், இத்தாலியன், பிரெஞ்சு, ஸ்பானிஸ், ஜெர்மன், கிறீக், மலாய், சமஸ்கிருதம், போர்ச்சுக்கீஸ், ருஷ்யன், சிங்களம் ஆகிய 14 மொழிகளை அடிகள் அறிந்திருந்தார் இம்மொழிகளைக் கற்றிருந்த காரணத்தினால்தான் தம் மொழிகளைப் பேசும் மக்களுக்கு தமிழ் மக்களுடைய மொழி, கலாசாரம், பண்பாடு, வரலாறு, இலக்கியம் போன்றவற்றை எடுத்துக்கூற வாய்ப்பு உண்டானது.

---

பிறநாடுகளிலிருந்து வந்த சமயக்குரவர்கள் தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடித்து இக்கண்ணோட்டத்துடன் தமிழர் மரபின்படியே இலக்கியங்களையும் இலக்கணங்களையும் யார்த்தார்கள். வீரமாமுனிவர், கார்டுவெல் ஐயர், போப்பையர் போன்றவர்கள் இம்மன நிலையைக்கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள்.

## நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்

தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் இருந்த அரசுகள் வெவ்வேறு அரசுகளாக இயங்கித் தமக்குள் சிலவேளைகளில் போரிட்டுக் கொண்டிருந்த போதிலும் தாம் அனைவரும் ஓரினத்தைச் சார்ந்தவர் என்றும், தமிழ்மொழி இணைப்பதாகவும் கருதி வந்தனர்.

பெருநில மன்னரும், குறுநில மன்னரும் தம் எல்லைகளுக்குள் அரசு செலுத்தி வந்தாலும் தம் மனைவரின் நாட்டையும் தமிழகமென்றும், பொதுமை சுட்டிய மூவருலகமென்றும் அழைத்தனர். தமிழ்மொழியே அன்னாருடைய ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் வழிவகுத்தது. தமிழ்நாட்டின் எல்லைக்கப்பால் இருந்த நாடுகளை "மொழிபெயர் தேயம்" என்று அழைத்தனர். புறநானூறும், சிலப்பதிகாரமும் இவ்வாற்றலைப் புலப்படுத்தும் இடங்கள் பல. கனகவிஜயர் தமிழர் வீரத்தை ஏளனம் செய்த காலை 'தென்தமிழ் ஆற்றல் அறிந்திரலாங்கு' என்று கூறிச் சேரர் வடநாட்டின் மீது படையெடுத்தனர். தமிழ் மக்களுக்கு தம் சொந்த அரசின் பற்றோடு, தமிழ் நாட்டுப்பற்று என்னும் எல்லாத் தமிழ் அரசுகளையும் அடக்கிய பற்று இயல்பாக அமைந்து இருந்தது. தமிழ்ப்பாணரும், புலவரும், குறுநில மன்னரிடமும் பெருநில மன்னரிடமும் சென்று அன்னாரை வாழ்த்திப் பரிசில்கள் பெற்றனர். இளங்கோ அடிகள் மூவேந்தரின் ஒவ்வொரு நாட்டின் சிறப்பையும் பாடியுள்ளார். நாயன்மார், ஆழ்வார் வடமொழி இலக்கியத்திலிருந்து சமயக் கொள்கைகள் சிலவற்றைப் பயின்றாலும், தமிழ்நாட்டுப் பற்றையும் அவர்கள் தெளிவாகத் தம் பாடல்களில் காட்டியுள்ளனர்.

இவ்விருவகைப்பற்றும் நமக்கு ஒரு பாடமாக அமைகின்றது. ஈழநாட்டில் வடபகுதியும் கிழக்குப் பகுதியும், மலைநாட்டுப் பகுதியும் தம்தம் தனித்தனி இயல்புகளைப் பாராட்டி வந்தாலும் தமிழ்மக்கள் என்ற முறையில் பண்டைக்கால ஒற்றுமை முறைகளை நாம் தழுவ வேண்டும். தமிழ்மக்கள் இத்துணை நூற்றாண்டுகளாய்த் தழுவிய சமயங்கள் பல. ஆயினும் எச்சமயத்தைச் சார்ந்தாலும் தாம் தமிழ் மக்கள் என்று தமிழர் பண்பாட்டையும் கொள்கைகளையும் அவர்கள் கடைப்பிடித்தே வந்தனர். இன்றும் கடைப்புடித்தே வருகின்றனர்.

---

## தனிநாயகம் அடிகளார் நடாத்திய தமிழாராய்ச்சி மாநாடுகள்

முதலாவது மாநாடு
**மலேஸியாவின் தலைநகர் கோலாலம்பூரில் 1966 சித்திரை 16 - 23**

இரண்டாவது மாநாடு
**தமிழகத்தின் தலைநகர் சென்னையில் 1968 தை 03 - 10**

மூன்றாவது மாநாடு
**பிரெஞ்ச் நாட்டின் தலைநகர் பரீஸில் 1970 ஆடி 15 - 18**

நான்காவது மாநாடு
**யாழ்ப்பாணம் 1974 தை 03 - 07**

---

## தனிநாயக அடிகளாரின் இறுதி (நான்காம் உலகத் தமிழாராய்ச்சி) மாநாட்டில் வேண்டுகோள்

"உலகெங்குமுள்ள பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைகள் மூன்றாண்டுகளுக்கொருமுறை தொய்வில்லாமல் அடிகளார் ஆரம்பித்து வைத்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்துவதே அடிகளாருக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும் - காணிக்கையாகும்."

நம் இலக்கியத்திலும், கலைகளிலும் தோன்றும் தாய்மொழிப் பற்றினைப் பற்றி நான் விரிவாகக் கூறவேண்டியதில்லை. சேக்கிழாருடைய பெரியபுராணத்தை நான் படிக்கும் பொழுதெல்லாம் அவருடைய உருக்கம் நிறைந்த தமிழ்ப்பற்று என்னுள்ளத்தைக் கவருகின்றது. தமிழ் என்ற சொல் வருமிடங்களிலெல்லாம் அழகும் அன்பும் நிறைந்த அடைமொழிகளை அமைத்தே கூறுவார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கிய மறுமலர்ச்சி இம்மொழிப்பற்றை இன்னும் விளக்கமாக எடுத்துக்காட்டியுள்ளது. வேதநாயகம்பிள்ளை, பரிதிமால் கலைஞன், சுந்தரம்பிள்ளை, மறைமலை அடிகள் போன்றவர்கள் இப்பற்றினைத் தம் நூல்களில் தெளிவாகக் காட்டுகின்றனர். பேராசிரியர் சேதுப்பிள்ளையின் நூல்களில் தமிழின் இனிமை பக்கந்தோறும் இனிக்கின்றது. ஆயினும் இம்மொழிப் பற்றினைப் பாரதியாரும் பாரதிதாஸனும், என்றும் மறக்க முடியாத செய்யுட்களில் பாடியிருக்கின்றனர்.

பாரதியாரின் ''செந்தமிழ் நாடென்னும்...'' செய்யுள், வரலாற்று உண்மை நிறைந்த அரிய செய்யுள். அவருடைய ''யாமறிந்த மொழிகளிலே...'' என்னும் செய்யுள் தமிழர்களுக்கு எழுச்சி தரும் செய்யுள். இவ்விரு செய்யுள்களையும் நம் சிறுவர்களுடைய பாடநூல்களில் எது காரணம் பற்றி சேர்க்காமல் இருக்கிறார்களோ நான் அறியேன். நம் மொழிப் பற்றையும் நாட்டுப்பற்றையும் குறைப்பதற்காகவே இவ்விருட்டடிப்பு ஒரு சூழ்ச்சி என்று கருதுகின்றேன்.

(அமரர் தந்தை செல்வாவின் நினைவுச் சொற்பொழிவுகளிலிருந்து................)

(நன்றி ! உலகத் தமிழாராய்ச்சிக்கு வித்திட்ட தனிநாயகம் அடிகளார் நினைவு மலர். 'தொண்டன்' சஞ்சிகைக்கூடாக)

---

# தனிநாயக அடிகளாரின் தனிப்பண்பாடு

''தனிநாயக அடிகளார் ஒருமொழி வெறியரல்லர். அவர் ஒரு தமிழ்மொழி பக்தர். பிறமொழிகளை நையாண்டி செய்தவரல்லர். உலகெலாம் தமிழர் பண்பாட்டைப் பரப்பத் துணையாயிருந்தது, தமிழ் இலக்கியத்தில் காணப்படும். 'உலகக் கண்ணோட்டம்'' ஆகும்,

உதாரணமாக

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''

''*Every country is my country. Every man is my kinsman.*

''பெரிதே உலகம் பேணுநர் பலரே''

''யாதாலும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு''

போன்ற புறநானூறு, திருக்குறள் கருத்துக்களோடு, தமிழ் இலககியத்தில் காணப்படும் மனித நலக்கோட்பாடு அடிகளாரின் உள்ளத்தைக் கவர்ந்தவைகளாகும்.

## தமிழ்ச் செல்வங்கள் - தனிநாயக அடிகள் -

தென் ஆசிய நாடுகளும் கீழ்த்திசை நாடுகளும் விடுதலை பெற்றதன் பயனாகத் தமிழ் நாடும் ஏனைய நாடுகளும் புத்துணர்ச்சி பெற்றுப் பண்டைக்கால உறவினை மீண்டும் வளர்த்து வருகின்றன. முன்னொரு காலத்தில் ஐரோப்பா, அமெரிக்க நாடுகளைப் பண்பாடுள்ள நாடுகள் என்றும் சீர்பெற்ற சீமை என்றும் போற்றி வந்தோம். இன்று இந்தோனேசியா, கம்போதியா, பர்மா, மலாயா, வியட்நாம், தாய்லாந்து, போன்ற நாடுகளுடன் புது உறவு கொண்டாடி வருகின்றோம். அத்தகைய உறவும் நெருங்கிய நட்பும் மிகவும் பொருத்தமுள்ளவை.

தமிழ் மக்கள் இக்கால மறுமலர்ச்சிக்குப் புது ஆற்றலையும் அறிவையும் பெறவேண்டுமாயின். அவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் புத்துணர்ச்சிக்கு வேண்டிய ஆதாரங்களைக் காண்பர், அந்நாடுகளுக்குச் சென்ற பின்தான் நானும் தமிழருடைய பண்பாடுகள் எங்கெல்லாம் பரவி இருந்தது என்றும், எத்துறைகளில் பரவி இருந்தது என்றும் உணர்ந்தேன்.

சுமத்ரா தீவில், சிம்பெரின் என்னும் வகுப்பினர் தம்மைச் சோழர், பாண்டியர், சேரர், மலையாளத்தார் என்று வகுத்து வாழ்ந்து வருகின்றனர். அகத்தியர் வழிபாட்டிற்கும், கணபதி வழி பாட்டிற்கும் கணக்கற்ற சிலைகள் அங்கு சான்றாக விளங்குகின்றன. எழில் மிகுந்த பாலித் தீவிலுள்ள நாட்டியக் கலை தென்னிந்திய நாட்டியக் கலையுடன் தொடர்புள்ளதாகத் தோன்றுகிறது.

கம்போதியாவில் பல்லவர் சிற்ப முறைகளை அனுசரித்துக் கட்டிடங்களை அமைத்திருக்கின்றதை வியட்நாமிலுள்ள துரான் என்னும் நகர் உள்ள மாகாணத்திற்கு சம்பா, தேவியின் பெயரை அளித்திருக்கின்றனர். வங்கக் கடல் தென்னாட்டவருக்கு மத்தியதரைக் கடல் போல் விளங்கிய தென்பதற்கும் தென்னாட்டுக் கப்பலோட்டிகள் இக்கடலைக் கடந்து தம் வாணிபத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும், மொழியையும் பரப்பினர். என்பதற்கும் எத்தனையோ சான்றுகளைக் கண்டு மகிழ்கிறோம்.

தாய்லாந்திற்கு நான் சென்றிருந்த பொழுது அங்கு எதிர்பாராத முறையில் தமிழ்ப் பண்பாடு பரவியிருப்பதைக் கண்டேன். தாய்லாந்து அரசருடைய பட்டாபிஷேகச் சடங்கில் தமிழ்ச் செய்யுள் ஒன்றையும் அவர்கள் பாடுவதாக அறிந்து அவர்கள் கோயிலுக்குச் சென்று அவர்கள் படிக்கும் அத்தமிழ்ச் செய்யுளை அறிய விரும்பினேன். மகராஜ குருக்கள் என்னை வரவேற்று, அங்குள்ள தாய்மொழி ஏடுகளையும் கிரந்த ஏடுகளையும் எனக்கு காட்டினார். அவ் ஏடு ஒன்றிலிருந்து, பட டாபிஷேகத்தில் பாடும் தமிழ்ச் செய்யுளைப் பாடிக்காட்டினார். அவர்கள் உச்சரிப்பு எத்தனை தவறாக இருந்தாலும் பல தலைமுறைகளாகப் பாடி வந்த ''ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதியே'' என்று தொடங்கும் மணிவாசகப் பெருமானின் செய்யுள் பாடக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தேன்.

பங்காக் நகரிலும் தாய்லாந்தின் வேறு சில நகர்களிலும் திருப்பாவை, திருவெம்பாவை என்னும் திருநாட்களை இன்னமும் கொண்டாடி வருகின்றனர். பங்கக் நகரின் நடுவில் இருக்கும் தொண்ணூறு அடி உயரமுள்ள ஊஞ்சல் கம்பங்கள் சான்றாக இருக்கின்றன.

நான் எகிப்து நாட்டிலுள்ள லுக்ஸார். நகரத்தையும் தென்னமரிக்காவில் பெரு நாட்டிருக்கும் 'மாச்சுப் பிச்சு' என்னும் இன்காஹர்களுடைய பழைய கோட்டைகளையும் கண்டு பெரு வியப்படைந்தேன்.

கம்போதியாவிலுள்ள அங்கோர் வார்ட் எனும் அரண்மனையையும், அங்கோர்தான் எனும் பெரும் நகரின் கட்டடங்களையும் கண்டு மெய்மறந்தேன். அத்தகைய அரண்மனைகளை நான் உலகில் ஏனைய நாடுகளில் கண்டதில்லை. இத்தகைய இடத்தை உலகில் அறிஞர் அறியாதிருப்பது பெருங்குறையாகும்.

அங்கோர்தான் நகரில் காணப்படும். அரண்மனை கோபுரங்களில், ராமாயணம், மகாபாரதம் முதலிய காப்பியங்களின் காட்சிகளைக் காட்டும் அழகிய சிற்பங்கள் உள.

இந்நகரை அமைத்த அரசரும் மக்களும் பெருமை வாய்ந்தவர்களும் உயர்ந்த சிந்தனை படைத்தவர்களும் ஆவார்கள். இத்தகைய நகர்களைக் காணும் பொழுதுதெல்லாம் நம்முடைய இறுமையைத் தெளிவாக உணர்கின்றோம்.

இச்சிறு கட்டுரையில் நான் வலியுறுத்த விரும்புவது இந்த ஒரு விஷயந்தான். 'தமிழ் நாட்டு அறிஞர்களும் எழுத்தாளர்களும் வேற்று நாடுகளுக்குக் கடல் கடந்து பிரயாணம் செய்து அந்த நாட்டுச் செல்வங்களை நமது தெய்வத் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வருவதல் வேண்டும் என்பதே.

(நன்றி:- கல்கி தீபாவளி மலர் 1956)

# அனைத்துலகத் தமிழியலாய்வின்

## தந்தை: தனிநாயகம்

- மயிலங்கூடலூர் பி. நடராசன்

**அடிகளார் தந்தையா?**

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் தொழிற்பாடுகளின் பின்னணியில் நின்று அதனை இயக்கியவர் அதன் ஆத்மீகத் தந்தையாகிய வண. தனிநாயகம் அடிகளாரே! அடிகளாரின் பணிகளுக்கு பலர் அவ்வப்போது உதவி வந்தாலும், அடிகளார் தாமே தனியொருவராகக் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாய் விடாது முயன்றமையும், அவர் மூலமுதலில் வழங்கிய அகத்தூண்டுதலுமே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் உருவாகவும், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெறவும், உலகனைத்தும் பரந்துள்ள பண்பாட்டியலாளர் தமது உள்ளங்களில் தமிழுக்கு உரிய இடமளிக்கவும் காரணமாய் அமைந்தன.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற முன்னணி உறுப்பினராய் தமிழியல் ஆய்வாளர் இருவரின் கூற்றுக்களின் வாய்மை உறுதிப்பாட்டை வாய்ப்புப் பார்க்க முற்பட்டதன் விளைவாக எழுந்ததே இக்கட்டுரை.

**திராவிடம் தோற்றது?**

தமிழ் தொன்மையான மொழி. நெடுங்காலமாய்த் தமிழ் மொழியும் தமிழ்ப்பண்பாடும் உலகநாடுகள் பலவற்றோடும் தொடர்புற்றிருந்தன. பதினேழாம் நூற்றாண்டு முதல். ஐரோப்பியரும், அமெரிக்கரும் தமிழ். தமிழ்ப் பண்பாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு சில கருத்துக்களை வெளியிட்டு வந்தனர். எனினும் மேற்கு நாட்டாரது கவனம் இந்தோ - ஆசிய மொழிகளினால் ஈர்க்கப்பட்டது. சிறப்பாகத் தம்மை தூய ஆரிய இனத்தினர் என்று கருதிய ஜேர்மனியர், சமஸ்கிருதத்தின் தொன்மை பற்றியும் மென்மை பற்றியும் பல கோட்பாடுகளை வெளியிட்டனர்.

இந்தோ - ஐரோப்பிய, இந்தோ-ஆரிய மொழிக் குடும்பங்கள் தொடர்பான ஆய்வு ஆரவாரத்தில் தமிழும் பிற திராவிட மொழிகளும் ஒதுக்கப்பட்டன. திராவிட மொழிகளின் சிறப்புக்களெனத் திராவிடவியலாளர் சிலர் கூறிய கருத்துக்கள் இந்தியவியலாளரால் புறக்கணிக்கப்பட்டன. இதனால், சமஸ்கிருதமும் ஆரியப் பண்பாடுமே இந்தியாவிற்குரிய தொன்மையானவை, தமிழும் தமிழ்ப் பண்பாடும் இந்தியப்

பண்பாட்டில் எத்துணை முக்கியத்துவமும் அற்றவை, சமஸ்கிருத ஆரியப் பண்பாடுகளின் வழிவழிப்பட்டவை என்ற கருத்துக்கள் மேலோங்கின.

எம். பி எமனோ, தோமஸ் பறோ ஆகிய மொழியியற் பேராசிரியர்கள் சமஸ்கிருதச் சொற்களின் வேர்களை வடமொழியிற் தேடித் தோல்வியுற்றுத் திராவிட மொழிகளில் அவற்றைக் கண்டறிந்தனர். அப்போதுநிலைமையில் புரட்சிகர மாற்றம் ஏற்பட்டது. எனினும் இம்முடிவுகளை அனைத்துலக ஆய்வாளர்களுக்கு அறிவிக்கும் அமைப்பு எதுவும் இல்லாததால் எதிர்பார்த்த பயன் ஏற்படவில்லை.

## தமிழியலில் அடிகளார்

தமிழியலாய்வு, கீழைத்தேயவியல் ஆய்வு, இந்தியவியல் ஆய்வு ஆகியவற்றில் புறக்கணிக்கத்தக்க நுண்கூறாகவே இடம் பெற்றது. தமிழரும், தமிழ்க் காதலரான பிறநாட்டார். சிலரும் தனிப்பட்ட நிலையிலேயே ஆய்வுகளை மேற்கொண்டனர் தமிழர் மறைவாகத் தமக்குள்ளே பழங்கதைகள் பேசிக்கொண்டிருந்தனர்.

பிறநாட்டாரோ தமது சூழலில் ஆதரவு அற்ற நிலையில் சிறிய அளவிலேயே தொண்டாற்றினர். இந் நிலையில் தனிநாயகம் அடிகளார் தமிழியலுக்குள் அடியெடுத்து வைத்தார். அப்போது இந்தியவியலாய்வு இருந்த நிலையையும் தமிழியலாய்வு இருந்த நிலையையும் அடிகளார் ஐயந்திரிபர உணர்ந்திருந்தார். யாழ்ப்பாணத்து திருநெல்வேலியிலே நடைபெற்ற வளர்ச்சிக் கழகத்தின் நான்காம் தமிழ் விழாவிலே (1951) பேசும்போது அடிகளார்:-

## தமிழாராய்ச்சி மாநாடுகள் எதற்காக....

"வெறும் புகழிற்காகவோ, காரணமின்றிப் போற்றுவதற்கோ நாம் தமிழாராய்ச்சியில் இறங்குவதில்லை ஆராய்ச்சியாளனின் நோக்கம் உண்மையைக் கண்டு பிடிப்பது, உண்மையைப் புலப்படுத்துவது, மறைந்திருக்கும் உண்மைகளை அகழ்ந்தெடுப்பது.

மொழிகள் எத்துணையிருக்கத் தமிழிற்கு மட்டும் இம்மாநாடுகளை நடத்தவும், உலகத்து அறிஞர்கள் வரவும் காரணங்கள் இருக்க வேண்டும்.

"இந்தியப் பண்பாட்டில் 75 விழுக்காடு திராவிடப்பண்பாடு" என்று சுநிதி குமார் சட்டர் கூறியிருக்கின்றார். இந்த உண்மையைத் தமிழ்த் துறைகளில் ஆராய்ச்சி நடாத்துவோர் உணர்ந்து கொண்டே வருகின்றனர்.

சிந்துவெளி நாகரீகம் திராவிட நாகரீகம் என்று எண்ணுகின்றவர்களுக்கு தமிழ் மக்களின் தொன்மையும் தமிழ்க் கலைகளின் தொன்மையும் நன்கு புலனாகும்.

... ....மொழி அமைப்பிலும் வளத்திலும் தமிழ்மொழி உலக மொழிகளிற் சிறந்தது. தமிழின் தொன்மை, அதன் வளம், புகழ், மண்டிக்கிடக்கும் பண்பாடு இவற்றையெல்லாம்ஆராய்கின்றவர்கள் மேலும் மேலும் அவற்றை ஆராய விரும்புவர் ஆதலாலேதான் தமிழ்ஆராய்ச்சி வளர்ந்து கொண்டு வருகின்றது.

(நான்காம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் தனிநாயகம் அடிகளாரின் ஆரம்ப உரை)

''இந்தியப்பண்பு, இந்திய நாகரீகம், இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர் (மாக்ஸ்முல்லர், வின்றர்னிட்ஸ், முதலாகப் பலரும்) மொழிவனவெல்லாம் திராவிடப் பண்பு, திராவிட நாகரீகம், திராவிடக்கலைகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டவை ஆயினும் பல்லாண்டுகளாக நடுவுநிலை கடந்தோர் பலர் இவ்வுண்மையை மறைத்தும், திரித்தும், ஒழித்தும் நூல்கள் யாத்தமையினால் இன்று இவ்வுண்மையை எடுத்துக் கூறுவதும் மக்கள் மனதில் ஐயம் விளைவிப்பதாக இருக்கின்றது. அங்ஙனம் எடுத்துக் கூறுவதற்கும் பெரிதும் மனத்துணிவு வேண்டற்படுவதாயிற்று''

என்ற உண்மை நிலையை எடுத்துரைத்தார்.

அடிகளார் கருத்துரைப்பதோடு நின்றுவிடவில்லை. நிலையை மாற்றியமைப்பதற்கான திட்டங்களையும் வெளியிட்டார்.

''தமிழராகிய நாமும், நமது இந்திய மொழிகளிலேனும் நம் தமிழைப்பற்றிய உண்மைகளை இதுகாறும் கூறினோம் அல்லோம் ஆகவே, உலகம் நம்மை உணராமலும், நாமே நம்மை உணராமலும் பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சி சொல, பான்மை கெட்டு, நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு உயிர் வாழ்ந்துள்ளோம். இன்று இத்தமிழ்க் கோயிலில் நிகழும் தமிழர் விழா, உலகில் தமிழ்நாட்டின் பெருமையையும் தமிழ்மொழியின் பெருமையையும் நிலைநாட்டும் புதியதோர் இயக்கத்தை உண்டாக்க வல்லது''

ஆதல் வேண்டுமென அடிகளார் குறை தீர்க்கும் முறையையும் எடுத்துரைத்தார். அடிகளார் வாழ்ந்த காலத்தில் பலர் 'தமிழ்' செய்தனர். ஆனால் அடிகளாரோ 'தமிழை நன்றாகச் செய்ய வேண்டும்' என்று உறுதி பெற்றிருந்தார். இதனை மெய்ப்படுத்தும் வகையில் அடிகளார்,

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே''

என்ற திருமூலரின் பாடலைத் தமது குறிக்கோளாய்க் கொண்டார். அதுமட்டுமின்றி, புறநானூற்றுப் புலவராகிய கணியன் பூங்குன்றனாரின்,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்'

என்ற உயரிய கருத்துக்களையும் தமது குறிக்கோளுடன் இணைத்துக் கொண்டார். சேரநன்னாட்டு மன்னராய் முடிசூட இருந்த இளங்கோவை இளங்கோவடிகள் ஆக்கி நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை தமிழுக்கு மணியாரமாகச் செய்தளிக்கத் தூண்டிய 'பாலது ஆணையே...' தனிநாயகம் அடிகளார் வாழ்விலும் குறுக்கிட்டுப் பல திடீர்த்திருப்பங்களை ஏற்படுத்தி அவர் முழுமையாகத் தம்மைத் தமிழியலுக்கே அர்ப்பணிக்க வழி வகுத்து என்பது தவறாகாது.

திருத்தொண்டுடன், தமிழ்ப்பணியும், சமூகப்பணியும், கல்விப்பணியும் செய்வதற்கான திருச்சபை ஆணையைப் பெற்றுக் கொண்டதாலேயே அடிகளார் முழுமையாகத் தமிழியலுக்குத் தொண்டாற்றும் வாய்ப்பைப் பெற்றார். கத்தோலிக்க நெறியின் சிறிய இழப்புத் தமிழியலுக்கு மாபெரும் பேறாக அமைந்தது.

## இயக்கமும் தமிழ்த்தூதும்

நன்றாகத் தமிழ் செய்யும் ஆணையைப் பெற்றுக் கொண்ட அடிகளார் 'புதியதோர் இயக்கம்' என்ற தமது கனவை நனவாக்கும் வகையில் பல முன்னோடிப் பணிகளை ஆற்றினார். இயக்கம், தமிழ்த்தூது, தொடர்புகள், வெளியீடுகள், பேரியக்கம் என அவற்றை நிரற்படுத்திக்கூறலாம்.

இயக்கம் என்ற வகையில் அடிகளார் இத்தாலியில் 'இறையியற் பயிற்சி' பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் (1934-39) அமைத்த 'வீரமாமுனிவர் கழகத்தை 'முன்னோடி முயற்சி எனக் கூறலாம். பின்னர் 1947 இல் அடிகளர் தூத்துக்குடியில் 'தமிழ் இலக்கியக் கழகத்தை' நிறுவிப் பணியாற்றினார். தமிழியற்பணிகளை

முறைப்படி மேற்கொண்ட முயற்சியாக இதனைக் கருதலாம். இக்கழகத்தின் சார்பிலேயே 1949, 1950 ஆம் ஆண்டுகளில் அடிகளார் உலகத்தூதை மேற்கொண்டார்.

தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு என்பவற்றின் பெருமைகளை பிறருக்கு அறிவிக்கவும், பிற பண்பாடுகளுடன் தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்பட்ட தொடர்புகளை அறியவும், தமிழியலுக்குத் தொண்டாற்றும் நிறுவனங்கள், அறிஞர்களுடன் நேர்முகத் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளவும், பிறபண்பாடுகளின் சிறப்பியல்புகளையும் பெருமைகளையும் உணர்ந்து கொள்ளவும் அனைத்துலகத் தமிழ்த் தூது அடிகளாருக்குப் பயன்பட்டது.

வாழ்நாள் முழுவதும் அடிகளார் தமிழ்த்தூதராகவே செயற்பட்டார். தமிழகத்தில் வாழ்ந்த அடிகளார் பல்கலைக்கழகக் கல்வித்துறையில் பணியாற்ற ஈழம் வந்தபோது கொழும்பில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தை நிறுவித் தமிழியல் தொண்டைச் செய்தார்.

## தமிழியல் ஏடு

தமிழியல் அறிஞர்கள் தங்கள் கருத்துக்களைக் கட்டுரையாக்கி வெளியிட்டுப் பிறருடைய கருத்துக்களை அறிந்து கொள்ளவும், திறனாய்வு செய்யவும் வாய்ப்பளிக்கும் ஏடு எதுவும் அப்போது இருக்கவில்லை. அடிகளார் தூத்துக்குடியில் வாழ்ந்தவேளை அமைத்த தமிழிலக்கியக் கழகத்தின் சார்பில் 1952இல் 'தமிழ்ப்பண்பாடு' என்ற தமிழியல் ஏட்டை வெளியிட்டார். பதினைந்து ஆண்டுகள் வெளிவந்த இவ்வேடு, தமிழியல் அறிஞர்கள் சந்திக்கும் களமாகவும், கருத்துப் பரிமாறும் அரங்கமாகவும் அமைந்தது. இதன் மூலம் தனித் தனியாக நெருங்கிய தொடர்பின்றி தமிழியற் பணியாற்றிய அறிஞர்கள் ஓரேயணியில் இணையும் வாய்ப்பு ஏற்பட்டது.

'தமிழ்த்தூதின்' மூலம் அடிகளார் ஏற்படுத்திய தொடர்புகள் 'தமிழ்ப்பண்பாடு' ஏட்டின் மூலம் வலுப்பெற்றன. இத்தொடர்புகளும் இதனால் விளைந்த நட்புமே பெரியக்கமொன்றை அடிகளார் உருவாக்கத் துணை செய்தன. அடிகளார் வெளியிட்ட இவ்வேடே இப்போது அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தினால் 'தமிழாய்வு ஏடு' என்ற பெயரோடு வெளிவருகின்றது.

## தமிழியல் வெளியீடுகள்

தமிழ்ப்பண்பாட்டின் பெருமையையும் தொன்மையையும் உலகம் ஏற்றுக்கொள்ள மறுப்பதற்குச் சங்ககால இலக்கியங்களை அறியாததே காரணம் என்பதை உணர்ந்த அடிகளார் சங்காலஇலக்கியச் சிறப்பை உலகு அறியும் வகையில் ஆங்கிலத்தில் நூல்களை எழுதி வெளியிட்டார்.

'தொல் தமிழ்க் கவிதையில் இயற்கை' செல்வியல் இல்க்கியக்காலத் தமிழர் மனிதநேயம்' என்பன அவற்றுள் சில. தமிழியலில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் பற்றிய கட்டுரைகள் நூல்கள் என்பவற்றை ஆய்வாளர்கள் அறிந்து கொண்டால் மீண்டும் மீண்டும் ஓரே பொருளில் ஆய்வு நிகழ்த்துவதைத் தவிர்க்கலாம். முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் முடிவுகளை அறிந்து கொண்டால் அவ்விடத்திலிருந்து ஆய்வைத் தொடரலாம். தமிழ்ப் பண்பாடு பற்றிய பூரணமான அறிவும் தமிழியல் ஆய்வாளர்களுக்கு வேண்டியிருந்தது. இத்துறையைச் சார்ந்த பல நூல்களையும் தொகுப்புக்களையும் அடிகளார் வெளியிட்டார்.

'தமிழியல் ஆய்வு உசாத்துணை வழிகாட்டி (நூல்கள்)', வெளிநாடுகளில் தமிழியல் ஆய்வு தமிழ்ப்பண்பாடும் நாகரீகமும், 'தமிழியல் ஆய்வுகள்' முதலிய ஆங்கில நூல்களையும் அடிகளார் வெளியிட்டார். இம்முயற்சி தமிழியற் பேரியக்கத்துக்கான மிக முக்கிய நிபந்தனை என்பதில் ஐயமில்லை.

## புத்தியக்கப் பின்னணி

'கீழைத்தேயவியலாளரின் அனைத்துலகப் பேரவையே' தமிழியல் ஆய்வுக்கான களமாக அமைந்திருந்தது. இவ்வமைப்பில் அதற்குப் போதிய வாய்ப்பு அளிக்கப்படவில்லை. எனவே தமிழியலாய்வுக்குப் புதியதோர் இயக்கம் வேண்டும் என்ற தேவை உணரப்பட்டது.

1958-1962 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் அடிகளார், வி. ஐ. சுப்பிரமணியம், கமில் வீ. சுவெலபில் ஆகியோருடைய கூட்டுறவில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்துக்கான சிந்தனைக் கரு உருவானதென்று கருதப்படுகிறது.

அடிகளார் இதுபற்றிக் குறித்த அறிஞர்களுடனும் பிறருடனும் 1958 முதல் ஆராய்த போதிலும், அடிகளாருடைய உள்ளத்தில் புதிய தோர் இயக்கம் 1951 இலேயே கருவுயிர்த்து விட்டது. என்பதை முன்னர் கண்டோம். அடிகளாரே இதனைப் பின்வருமாறு தெளிவு படுத்துகிறார்:-

''அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1964 சனவரியில் அமைக்கப்பட்ட நிறுவனமாகும். எனினும், ஆணிவேர்கள் 1952 இல் 'தமிழ்ப்பண்பாடு' என்ற காலாண்டி தழின் வெளியீட்டோடு தொடங்கிய ஓர் இயக்கத்தில் நிலைகொண்டுள்ளன. சென்னையில் 1952 இல் நிறுவப்பட்ட 'தமிழ்ப்பண்பாட்டுக் கழகம்' கொழும்பில் அதே ஆண்டில் நிறுவப்பட்ட 'தமிழ்ப்பண்பாட்டுக் கழகம்' என்பனவும் இவ்வியக்கம் வளர ஊக்கமளித்தன. 'தமிழ்ப்பண்பாடு ஏடு' மேற்படி கழகங்கள் அவற்றின் அமைப்பாளர்கள் ஏற்படுத்திய நட்புறவுகள் என்பன மூலம் ஏற்படுத்தப்பட்ட அனைத்துலகத் தொடர்புகள் ஆகியன மன்றம் உருவாகப் பேருதவி செய்தன.''

அடிகளாரின் இக்கூற்று உண்மை, வெறும் தற்புகழ்ச்சியல்ல என்பதைத் தொடர்ந்துவரும் செய்திகள் உறுதி செய்யும்,

## மூன்றாண்டு முயற்சி

'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம், 1964 இல் புதுதில்லியில் அமைக்கப்பட்டது. என அடிகளார் ஒரே வசனத்தில் கூறிவிட்டார். ஆனால், 1961 முதல் 1964 வரை மூன்றாண்டுகள் அடிகளார் ஓயாது ஒழியாது உழைக்க வேண்டியிருந்தது. தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்ற மூன்றும் 'நிலன் ஆள்பவர்க்கு மட்டுமல்ல தமிழ் ஆள்பவர்க்கும் வேண்டுமென்பதை அடிகளார் இக்காலத்தில் ஆற்றியபணிகள் மூலம் அறியமுடிகின்றது. இம்மூன்று ஆண்டுகளில் அறிவு, உரு, ஆராய்ந்த கல்வி ஆகிய மூன்றுடைய அடிகளார் அனைத்துலகத் தமிழாராய்ச்சி

---

அமெரிக்காவின் பல்கலைக் கழகமொன்றில் சொற்பொழிவு நிகழ்த்தும் போது கூறிய கூற்று:

*'Suffering, like a clovd, passes away, but to have suffered do?s not pass away''*

'துன்பம் என்பது மேகமூட்டம் போன்று மாறக் கூடியது ஆனால் துன்பப்பட்டோம் என்ற உணர்வு மாறாது.''

---

மன்றத்தை நிறுவச் செறிவுடன் செய்த வினைகளைச் சிறிது காண்போம்.

## தமிழகத்தை நாடினார்

தமிழியலுக்காகவே தமது வாழ்வை அர்ப்பணித்த அடிகளாருக்குப் பேராசிரியர்ப் பதவியை வழங்கியதன் மூலம் ஈழத்திலோ தமிழகத்திலோ உள்ள பல்கலைக் கழகத் தமிழ்த் துறைகள் பெறாத பெருமையை 'மலேசியப் பல்கலைக் கழகம் பெற்றுக்கொண்டது.

1961 ஆம் ஆண்டு தமிழ்த்துறைத் தலைவர்களோடும் பேராசிரியர்களோடும் சரியாசனத்திலிருக்கும் பதவியும் கனமும் கிடைத்ததும் அடிகளார் விரைந்து செயற்படத் தொடங்கினார். எனினும் அவர் தமிழ்கூறும் நல்லுகத்தின் 'மூத்தவர்களான' தமிழகத்தார்க்கு முதன்மை அளிக்கத் தவறவில்லை. அடிகளார் தமிழகம் சென்றார்; மாண்புமிகு அமைச்சர் சி. சுப்பிரமணியத்தைச் சந்தித்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் தெ பொ மீனாட்சிசுந்தரனாரையும் தாம் உறுப்பினராக இருந்த சென்னைத் தமிழாராய்ச்சி வளர்ச்சிக் கழக அலுவலர்களையும் கண்டார். அவர்களோடு, ஆண்டுக்கொரு முறையாவது சென்னைத் தமிழராய்ச்சி வளர்ச்சிக் கழக ஆதரவில் உலகெங்குமுள்ள பல்கலைக் கழகங்களின் தமிழ்த்துறைத் தலைவர்களின் மாநாட்டைத், தமிழராய்ச்சி வளர்ச்சிக் கழகம் நடத்த வேண்டும் என்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் அழைப்பாளராக இருக்க வேண்டும் என்றும் கோரும் கடிதத்தை அடிகாளாரும், பேராசிரியர் தெ. பொ. மீ, யும், கழகத் தலைவரான

மாண்புமிகு சி. சுப்பிரமணியத்திற்கு 1961 ஒக்டோபர் 27 ஆம் நாள் எழுதினார்

28-10-61 இல் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தித்தாள் அடிகளாருடன் நடத்திய செவ்வியை வெளியிட்டது. அச்செவ்வி, அடிகளாரே இத்திட்டத்தின் தந்தை என்பதை விளக்கும் சான்றாகும். சமுகத்தலைவர் தமிழகத்தைவிட்டு நடுவண் அரசின் அமைச்சரானதால் அடிகளார் முயற்சி தடைப்பட்டது.

## மலேசியா உதவுமா?

ஓராண்டு காலமாக எவ்வித முன்னேற்றமும் ஏற்படாததால் அடிகளார் தாமே செயற்பட முனைந்தார். இந்தியாவில் அல்லது மலேசியாவில் தமிழ்த்துறைத் தலைவர்கள் மாநாட்டை நடாத்த மாலேசியா உதவி கிடைக்குமா என்பதை ஆராய முயன்றார். இதன் பயனாய் 1962 ஒகஸ்ட் 12 ஆம் நாள் மலேசியத் தேசியக் கல்வி (இந்தியர் பாடசாலைகள்) வளர்ச்சிசபைச் செயலர் வி. செல்வநாயகம் இல்லத்தில் ஆய்வுக் கூட்டம் நடந்தது அடிகளார் கூட்டத்தின் நோக்கங்களை விளக்கினார். சபையின் தலைவரும் மலேசிய அமைச்சருமான மாண்புமிகு வி. மாணிக்கவாசகம் கூட்டத்திற் கலந்துகொண்டார். அடிகளாரின் கருத்துக்களை வரவேற்று நிதியுதவிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் இக்கூட்டமே 1966 ஆம் ஆண்டு மலேசியாவில் வரலாற்றுப் பெருமைமிக்க மூதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு கால்கோளாக அமைந்தது. 'தமிழகம் செய்ய முடியாத உலகச் சாதனையை மலேசியா செய்தது-என்று தமிழக ஏடுகளே மலேசிய மாநாட்டைப் பாராட்ட இக்கூட்டமே வழிவகுத்தது.

## மீண்டும் தமிழகத்தில்...

கீழைத்தேயவியலாளரின் இருபத்தாறாவது அனைத்துலகப் பேரவை 1964 சனவரியில் புதுடில்லியில் நடைபெறவிருந்தது இம்மாநாட்டுக்கு வரும் தமிழ், திராவிடவியலாளர்களைச் சென்னைக்கும் அழைத்துத் தமிழியல் மாநாட்டை நடத்துவதன் மூலம் பொருளாதார நெருக்கடியை தவிர்க்க, அடிகளார் விரும்பினார் 1963 ஒகஸ்ட் திங்களில் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு ம. பக்தவத்சலம் தலைமையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி வளர்ச்சிச் சபைக் கூட்டத்தில், அடிகளார் 1964 சனவரியில் தமிழியலாய்வு மாநாட்டை நடத்தும் தமது திட்டத்தை முன் மொழிந்தார். அடிகளாரின் முன்மொழிவு ஏற்கப்பட்டது. மாநாட்டுப் பொறுப்பு 'தமிழ், வெளியீட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது

---

## அச்சுவாகனம் ஏறிய உலக மொழிகளுள் பலவற்றுள்ளும் முதல் அச்சுவாகனம் ஏறிய சிறப்பு தமிழுக்கே உண்டு

"தமிழ் நாட்டில் அச்சுக்கலை அறிமுகஞ் செய்யப்பட்ட ஆண்டையும், நாளையும், ஏனைய உலக நாடுகளில் உள்ள மொழிகள் அச்சுவாகனம் ஏறிய ஆண்டுகளையும், நாள்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்மொழி குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெறுகிறது

சீனநாட்டில் 1584 இல்தான் அச்சுக்கலை முதன் முதல் ஐரோப்பியர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. யப்பான் நாட்டில் 1590 இலும் பிலிப்பைன்ஸ் நாட்டில் 1593 இலும் புதிய உலகமாகிய அமெரிக்காவிலுள்ள பேருவில் ஸ்பானிஸ் மொழியில் அச்சுக்கலை 1584 இலும், ஆபிரிக்க மொழியில் 1624 இலும், ரூசிய நாடு 1563 இலும் அச்சுக்கலை அறிமுகமாகியுள்ளது.

"கார்த்தில்லா" (Cartilha) என்ற 38 பக்கங்களையுடைய சிறிய நூல் தமிழிலும் போர்த்துக்கிச மொழியிலும் 1554இல் லிஸ்பன் நகரில் அச்சேறியுள்ளது." தனிநாயக அடிகளார் 1954 இல் லிஸ்பனுக்குச் சென்று இந்நூலைப் பார்வையிட்டு இதன் சிறப்பைப் பறைசாற்றினார்.

தமிழ்மொழியில் அச்சேறிய முதல் நூல்களைக் கண்டுபிடித்து. தமிழ்மொழியின் பெருமையைப் பறைசாற்றிய பெருமை அடிகளாரையே சாரும்.

---

## மீண்டும் ஒரு தோல்வி

1964 ஜனவரி மாநாடு பற்றித் தமிழ் வெளியீட்டுக் கழகச்சார்பில் அ. ச. ஞானசம்பந்தன் அடிகளாருக்குப் பல அஞ்சல்கள் எழுதினார். இலங்கையில் முதற்கடிதம் 1963 ஒக்ரோபர் 31 ஆம் நாள் எழுதப்பட்டது. கீழைத்தேயவியலாளர் பேரவையிற் கலந்து கொள்ளும் திராவிடவியலாளர் பட்டியலைப் பெற மேற்கொண்ட முயற்சிகளைக் குறிப்பிட்டு, அடிகளாரே அப்பட்டியலைத் தரவேண்டும் என்று கேட்டிருந்தார். புதுடில்லி மாநாட்டு இணைச் செயலாளர் பேராசிரியர் தண்டேகார் நடுவண் அமைச்சர் மாண்புமிகு குமாயூன் கபீர் ஆகியோரிடம் கேட்டுப் பயன் கிடைக்காததாலேயே அடிகளாரின் துணையை அ. ச ஞா. நாடினார். அடிகளார் உடன் பதிலளித்த போதிலும் கடிதம் தொலைந்து விட்டது. மீண்டும் அ. ச. ஞா. புதுடில்லி மாநாட்டு இணைச்செயலாளரான திருமதி கபிலா வத்ஸ்யாயனாவுக்குக்கும் அமைச்சருக்கும் கடிதம் எழுதினார். 1963 டிசம்பர் இரண்டாவது வாரத்திலேயே பட்டியல் தரமுடியுமென அவர்கள் கூறினார். இதனால் செயலற்ற நிலை தோன்றியது. தேவையான நிதியைப் பெறக்கூடிய ஏற்பாடுகளும் இருக்கவில்லை.

எனினும், 1963 நவம்பர் 28 ஆம் நாள் சென்னை, அண்ணாமலைநகர், மதுரை ஆகிய இடங்களில் 1964 தை 13 முதல் 17 வரை நடைபெறவுள்ள உலகத்தமிழ் மாநாடு பற்றி அடிகளார் அமைப்பாளரிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றார். 'அனைத்துலக உடனுழைப்பு' என்ற பொருளில் அடிகளார் இருபது நிமிடங்களுக்கு கட்டுரை படிக்க வேண்டுமென்று பணிக்கப்பட்டார் ஆனாலும், மாநாட்டுத் திட்டம் மௌனமாகவே கைவிடப்பட்டது.

## தோற்றது ஏன்?

இரண்டு ஆண்டுகள் தமிழகத் தலைவர்களும் அறிஞர்களும் முயன்றும் 1964 சனவரியில் தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் நடாத்த முடியாமற் போய்விட்டது. ''இது ஏன் நிகழ்ந்தது?'' சென்னையில் நடைபெறவிருந்த முதலாவது மாநாடு மிகப்பல காரணங்களால்நடைபெறவில்லை' என அடிகளார் மலேசிய மாநாட்டு நிகழ்ச்சித் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளார்.

மாநாட்டு அமைப்பாளர்களிடம் தொலைநோக்கும் திட்டமிடும் ஆற்றலும் இருக்கவில்லை. மாநாட்டின் நோக்கும் பயனும் செயற்பாடுகளும் பற்றிய சாதகமான மனப்போக்கும் அவர்களிடம் இருக்கவில்லை. சாதனையில் நம்பிக்கையற்ற நிலையில் திணிக்கப்பட்ட பணியைக் கடமைக்காக அவர்கள் நிறைவேற்றமுயன்றனர். இவ்வுண்மை பின்னர் 1964 சனவரி 7 ஆம் நாள் புதுடில்லியில் வெளியிடப்பட்டது.

நடைபெற்ற ஐந்து அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடுகளில் மூன்று மலேசியா, பிரான்சு, இலங்கை ஆகிய நாடுகளில் நடந்தன. இரண்டு மாநாடுகள் தமிழகத்தின் திராவிட இயக்க அரசுகளால் நடத்தப்பட்டன. தமிழ் நாடு காங்கிரஸ் அமைச்சரவையால் முதல் மாநாட்டை நடாத்த முடியவில்லை. இவை மாநாடு கருச்சிதைவடையக் காரணமான சூழலை விளக்கும்.

## களத்தில் அடிகளார்

'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என்ற கோட்பாட்டைக் கொண்ட அடிகளார் தூங்கிவிடவில்லை. கீழைத் தேயவியலாளரின் 26 ஆவது அனைத்துலகப் பேரவை தரும் வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்துவது என அடிகளார் உறுதிபூண்டார். 'தமிழ்கூறும் நல்லுலகம்' 'அனைத்துலகப் பொதுப்பண்பாடு' ஆகிய இரு கோட்பாடுகளிலும் நம்பிக்கை கொண்ட பலர் புதுடில்லி வர அடிகளார் மறைமுகமாகச் செயற்பட்டார். இம்முறை ''அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்'' என்ற பெயரில் ஓர் இயக்கத்தை நிறுவ அடிகளார் முடிவு செய்தார். 1964 ஜனவரி 7ம் நாள் புதுடில்லிக்கு வந்திருந்த தமிழியல் அறிஞர்களின்

கூட்டத்தை நடாத்த அடிகளார் திட்டமிட்டார். தமிழகத்தை மீண்டும் முன்னணியில் விட அடிகளார் விரும்பினார்.

அனைத்துலக அடிப்படையில் அவமானத்தைத் தேடிக்கொண்டதாலும், உருவாகவிருக்கும் மன்றத்தின் மதிப்பை சரியாக உணர்ந்து கொள்ளாததாலும் தமிழக அறிஞர்கள் முன்னணியில் நிற்க விரும்பவில்லை. தமிழகத்திற்குப் பதிலாக கேரளம் அடிகளாருடன் இணைந்தது. கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் வி. ஐ. சுப்பிரமணியம் கூட்டத்திற்கான இணை அழைப்பாளராக அடிகளாருடன் ஒப்பமிட்டார். பேராசிரியர் ஜீன் பிலியோசா (பிரான்சு) பேராசிரியர் எப். பி யே. குய்ப்பர், (லெய்டன்) கலாநிதி கமில் வி. சுவெலபில் (செக்கோசிலவாகியா) கலாநிதி ஆர். ஈ. ஆஷர் (லண்டன்) முதலிய வெளிநாட்டு தமிழியலறிஞர் உட்பட இருபத்தாறு பேரறிஞர்கள் இக்கூட்டத்திற்கு சமூகந் தந்திருந்தனர்.

## முன்மொழியும் எதிர்மொழியும்

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றக் கால்கோள் விழா 1964 ஜனவரி 7 ஆம் நாள் புதுடில்லியில் விஞ்ஞான பவனின் முதலாம் மாடியில் மிக எளிமையாக நடைபெற்றது. பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அடிகளார் சிறப்புக் கூட்டத்தின் நோக்கங்களை விவரித்துரைத்தார். யாழ்ப்பாணத்து திருநெல்வேலியில் தமிழ்ப் பெருங்குடி மக்களின் முன் 1951 இல் 'புதியதோர் இயக்கம் வேண்டும்' என்ற விருப்பை முன் மொழிந்த அடிகளார் 1964 ஜனவரி 7 இல் பரந்து விரிந்த தமிழ்கூறும் நல்லுலகத்துத் தமிழியற் பேரறிஞர் முன், 'அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்' நிறுவப்பட வேண்டும் என முன்மொழிந்தார். கலாநிதி கமில் வி. சுவெலபில் அதனை வழி மொழிந்தார். அடிகளாரின் முன்மொழிவு எளிதாக நிறைவேறிடவில்லை. சென்னைப் பல்கலைக்கழக இந்தி உயர் விரிவுரையாளர் சங்கர் ராஜ்-நாயுடு திராவிட மொழிகள் அனைத்தையும் ஆய்வு செய்யக்கூடியதாக அம் மன்றம் 'அனைத்துலகத் திராவிட ஆராய்ச்சி மன்றமாக அமைய வேண்டும்' என திருத்தம் முன்மொழிந்து சலசலப்பை ஏற்படுத்தினார்.

## பேரியக்கம் பிறந்தது

அமைப்பாளர் தாம் கூட்டம் கூடிய நோக்கத்தை மீண்டும் விளக்கினார்கள். "திராவிட மொழிகளின் ஒப்பியலாய்வு என்ற நோக்கத்திற்குத் தனியமைப்பை நிறுவலாம். குறித்த சிறப்புக் கூட்டம் தமிழியலாய்வுக்கு ஊக்கமளித்து, முன்னேற்றவே கூட்டப்பட்டது. தமிழியல் ஆய்வில் நாட்டங்கொண்டவர்களை மட்டுமே இக்கூட்டத்திற்கு அழைத்திருக்கிறோம்." என அழைப்பாளர்கள் விளக்கமளித்துத் தமிழாராய்ச்சி மன்றம் நிறுவ வழிவகுத்தனர்.

மன்றத்தின் தலைவராக ஜீன் பிலியோசா தேர்ந்தெடுக்கப் பட்டார். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மு. வரதராசனார், தோ. பறோ. எம். பி. எமனோ, எப். பி. யே. குய்ப்பர் ஆகியோர் துணைத்தலைவரானார்கள். கமில் வி. சுவெலபிலும் தனிநாயகம் அடிகளாரும் இணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனார்.

''திராவிடவியலிற் பொதுவாகவும் தமிழியலில் சிறப்பாகவும் ஆய்வை ஊக்குவிப்பதும் அவ்வாய்வுகளை ஒன்றிணைத்து மேலும் வளர்ப்பதற்கு உதவுவதும்'' நோக்கமாகக் கொண்ட அனைத்துலக மன்றத்தை நிறுவிய பெருமை, அதன் தந்தை என்ற மதிப்பு அடிகளாருக்கே உரியது என்பதை இம்மன்ற வரலாறு காட்டுகிறது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை இடைவிடாத முயற்சியின் மூலம் நிறுவி 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்'

என்ற பொய்யாமொழி இலக்கணத்திற்கு இலக்கியமானவர் அடிகளார். அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தை நிறுவி, அம்மன்றம் கடந்த காலத்தில் பெரும்பயன் விளைத்த ஐந்து உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடாத்த வழிவகுக்குமாறு அடிகளாரை விட்டவர் யார்? ''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்ற அடிகளாரின் மேற்கோளை விட இதற்குப் பதிலேது?

**தனிநாயகம்**

''இராமனிருக்குமிடம் சீதைக்கு அயோத்தி'' என்பது போல அடிகளார் வாழ்ந்த பணியாற்றிய - இடமே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடைபெறுமிடம் என்பதை மலேசிய, பிரான்சிய, ஈழ மாநாடுகள் நிருபித்தன. நடைபெற்ற ஐந்து மாநாடுகளில் அடிகளாரின் முயற்சியோடு, அவரது வழிகாட்டலோடு நடைபெற்றன. 'மலையென' வந்த தடைகளையெல்லாம் அடிகளாரது விடா முயற்சி என்ற தீயினில் தூசாகியதால் அவர் மறைந்தபின் ஐந்தாவது மாநாட்டை எவ்விதச் சிக்கலுமின்றிச் சிறப்பாக நடத்த முடிந்தது. அடிகளார். அமைத்த பலமான அடிப்படையே இதற்குக் காரணம் என்பது உறுதி.

கலாநிதி ஆர். ஈ. ஆஷர் கூறுவது போல அடிகளாரைத் தவிர வேறெவராலும் இப்பணியைத் தனியொரு தலைவராக – தனிநாயகமாக – நின்று ஆற்றியிருக்க முடியாது. என்பதை மன்றம் உருவான வரலாறு காட்டுகிறது. அடிகளாரின் பணியால் கீழைத்தேயவியலாளர் உள்ளங்களில் தமிழின் பெருமை பற்றிய சரியான விளக்கம் ஏற்பட்டுள்ளது.

இதுவே அடிகளாருக்குரிய உயரிய நினைவுச் சின்னமாகும்.

**காப்பது கடமை**

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் அடிகளார் ஆற்ற நினைத்த மிகப் பலபணிகளில் சிலவற்றையே ஆற்றியுள்ளது. எனவே, மன்றம் தொடர்ந்து நிலைபெற வேண்டும். மன்றத்தில் உறுப்பினராகவுள்ள தமிழ்க்காதலர் அனைவரும் தமிழரல்லர் பல்வேறு நாட்டினர். பல்வேறு மொழியினர், பல்வேறு மதத்தினர். பல்வேறு அரசியற் சார்பினர். எனவே, இவர்கள் சிலவேளை வெவ்வேறு திசைகளில் செல்ல நாடலாம். அனைவரையும் ஒரு குறிக்கோளை நோக்கி ஒற்றுமையாக இயங்க வைப்பதில் அடிகளார் வெற்றி கண்டார். சில சுயநலமிகளின் போக்காலும் அரசின் தலையீட்டாலும் மன்றம் செயலற்றுப் போக நேரிடுமோ என்ற ஐயம் ஈழத்தில் நடைபெற்ற நான்காவது மாநாட்டின் போது ஏற்பட்டது. இராண்டாவது ஐந்தாவது

மாநாடுகளின் போது " உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுக் " காலங்களில் தமிழக அரசு " உலகத்தமிழ் மாநாடுகளை " நடாத்தியது. இரண்டையும் ஒன்றென மயங்கி மன்றத்தின்மீது கண்டனக்கணை தொடுத்தோர் சிலர், அடிகளாரையும் மன்றத்தின் நோக்கங்களையும் பின் தள்ளிவிட்டுத் தமிழகம் செயற்பட முயன்றதும் புதிய அமைப்புகளை நிறுவியதும் எதிர்காலம் பற்றிய சில ஐயங்களைத் தோற்றுவிப்பது இயல்பே.

இவற்றின் சுருக்கமாகத் தமிழியல் வரலாற்றில் புரட்சி செய்த பெருமை சேர்த்த பேராசிரியர் எம். பி. எமனோ கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

" அடிகளாரின் தோல்வி காணாத அமைதியும் ஆற்றல் மிக்கதும் எழுச்சி தருவதுமான செயலாட்சித் திறனுமே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளின் பன்முகப்பட்ட பணிகளின் வெற்றிக்குக் காரணமாகும்.

அவரது ஆற்றல் கோலாலம்பூரிலும் பாரீஸிலும் புலப்பட்டது. எனினும் அவர்களது செயலாட்சியின் திறன் சென்னையிலும். யாழ்ப்பாணத்திலும் நடந்த இன்னல் நிறைந்த மாநாடுகளில் நன்கு உணரப்பட்டது. சிலவேளைகளில் வேறுபட்ட திசைகளிற் செல்லநாடும் குதிரைகளைக் கட்டியாண்டு " அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் " என்ற தேரைச் செலுத்துவது எளிதான பணியல்ல "

பேராசிரியர் ' எமனோவின் ' எச்சரிக்கையைப் புரிந்து கொண்டு, தமிழியல் ஆய்வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு, ' தந்தை ' வழியில் தமிழாராய்ச்சி மன்றத்தை நடத்துவது தமிழியலாய்வுத் ' தனையர்களின் ' தலையாய கடனாகும்.

★ ★
★
★ ★

# தமிழ் ஆராய்ச்சியும் தனிநாயக ஆய்வகமும்

பேராசிரியர் கலாநிதி
**வே. அந்தனிஜான் அழகரசன் அடிகள்**

...ஆயுந்தோறும், ஆயுந்தோறும் இன்பந் தருவது தமிழ் தமிழை ஆராய்ச்சி செய்யச் செய்ய நமக்கு இன்பம் கொடுப்பது தமிழாகும். இதனாலன்றோ புரட்சிக்கவி பாரதிதாஸனும் ;ஒரு பெண் தரும் இன்பத்தை விட தேன் தமிழ் தரும் இன்பம் பெரிது' என்றார்.

**தமிழ் ஆராய்ச்சி**

தமிழாராய்ச்சி, தமிழர்களுக்கு ஒரு புதிய முறையல்ல. அது கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இனத்தோடு, தமிழ் இலக்கியத்தோடு கலந்துவிட்ட ஒரு பாரம்பரியமாகும். மூன்று சங்கங்களும் தமிழன், தமிழ் ஆராய்ச்சியில் எவ்வளவு உயர்ந்து நிற்கிறான் என்று பறை சாற்றுகின்றன.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியத்தை எடுத்துக் கொண்டால் எவ்வளவு நுணுக்கமாக மொழியையும், அதன் தன்மைகளையும் இலக்கண இலக்கிய இயல்புகளையும் நன்கு ஆய்ந்து தொல்காப்பியத்தை தொல்காப்பியர் படைத்தார் என்று அறிகின்றோம். இரண்டாயிரம் ஆண்டுகளாக உலக மக்களை வியக்க வைக்கும் சங்க இலக்கிய நூல்கள் தகுந்த ஆராய்ச்சி இன்றிதோன்றியிருக்க முடியாது. சங்ககால இலக்கியங்கள் நுண்மான் நுழைபுலத்துடன் மனிதனின் உள்ளத்தையும் இயற்கையையும் ஆய்ந்த பின்னரே எழுதப் பட்டிருக்கின்றன.

சங்ககால நீதி இலக்கியங்களை ஆழமாக ஆய்ந்த பின்னரே திருக்குறள் எழுதப்பட்டுள்ள சிந்தனையை அள்ளும் சிலப்பதிகாரம் தனக்கு முன்னே இருந்த இலக்கியப் பாரம்பரியங்களை அலசி ஆய்ந்து, அக்காலத்தில் நிலவிய பண்பாடு, சமயம், மூவேந்தர் ஆட்சியின் கீழ் வாழ்ந்த மக்களின் மனோநிலைகளை எல்லாம் ஆய்ந்த பின்னரே எழுதப்பட்டன.

இடைக்காலத்தில் தோன்றிய உரையாசிரியர்கள்கூட தங்களுக்குமுன் - பலநூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய இலக்கியப்பனுவல்களைப் படித்து ஆய்ந்த பின்னரே உரை நூல்களை எழுதினர். அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்கள் தனக்குமுன் இருந்த ஒரு காப்பியத்தைப்பற்றி விளக்குகையில் அக்கால மக்களின் இசைப்புலமை, நாட்டியத் திறமை,வாணிபச் செழிப்பு, சமயச்சடங்குகளின் சிறப்புப் பற்றியெல்லாம் விவரித்துக் கொண்டே செல்கிறார்.

மேலே கூறப்பட்ட நூல்களை நாம் ஆழ்ந்து படிக்கும்போது, ஓர் உயிரோட்டமுள்ள சங்கிலித் தொடர்பான ஆராய்ச்சி முறைகள் தமிழ் இலக்கிய உலகில் இருந்து வந்ததை அறிகின்றோம் தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படுகின்ற டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் பதிப்பித்த நூல்களில் கூட இந்த ஆராய்ச்சிப் புலமையைக் காணலாம்.

**தற்காலத் தமிழ் ஆராய்ச்சி**

தற்காலத் தமிழ் ஆராய்ச்சி ஐரோப்பியர்களின் வருகையிலிருந்து தொடங்குகின்றது. சிறப்பாக 17ஆம் நூற்றாண்டிலும், அதன் பின்னரும் வந்த ஐரோப்பிய பாதிரிமார்களின் வருகையிலிருந்து தொடங்குகின்றன. 1 ஆம் நூற்றாண்டிலே, தரங்கம்பாடியிலே வாழ்ந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த லூத்தரன் சபையைச் சார்ந்த பாதிரியார் பத்தலோமியஸ் சீகன் பால்கு என்பவரே தமிழ் இலக்கியத்தின் தலைசிறந்த தன்மைகளையும், சமய வழிபாட்டின் சிறப்புகளையும் அறிந்து ஆய்வுசெய்த முன்னோடிகளில் ஒருவராவர். இவரது நண்பரான 'கிண்ட்லர்' என்பவர் "ஜேர்மன் பல்கலைக் கழகங்களில் கற்றுக் கொடுக்கப்படக்கூடிய தகுதி வாய்ந்த மொழி தமிழ்" என, முதன் முதலாகக் குரல் கொடுத்த தமிழ் பக்தர் ஆவர்.

ஐரோப்பியர்கள் தமிழர்களின் ஞானத்தை, பேரறிவை, பண்பாட்டுச் சிறப்பை அறிய வேண்டும் என்பதற்காக 'சீகன் பால்கு' சில பாதிரிமார்களின் துணைகொண்டு தமிழ்ச் சுவடிகளை ஏராளமாகச் சேர்த்தார். இலக்கண நூல்களை எழுதினார். தமிழிலிருந்து பல மொழிபெயர்ப்புக்களைச் செய்தார்.

அதனைத் தொடர்ந்து வீரமாமுனிவர் (பெஸ்கி அடிகளார்) இலக்கண நூல்களையும், அகராதியையும் எழுதினார். அவருடைய சதுரகராதி, தொன்னூல் விளக்கம், போன்றவை இவற்றில் சிலவாகும். டாக்டர் ஜீயூ. போப், அறிஞர் கார்டுவெல், எல்வீஸ் போன்றோர் ஒருசில ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் ஆவர் சேவு அய்யங்பிள்ளை, பி. தி. சீனிவாச ஐயங்கார், சிவராசபிள்ளை, சி. வை தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை ஆகியோர் ஒருசில தமிழ் ஆராச்சியாளர் ஆவர்.

### இருபதாம் நூற்றாண்டில் தமிழ் ஆராய்ச்சி

இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற தமிழ் ஆராய்ச்சியாளராக தனிநாயக அடிகளார் விளங்குகிறார். அவர் அமைத்த அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிக் குழுவும், ஐந்து தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளும் அவரின் ஆராய்ச்சிப் புலமைக்குச் சான்று பகர்வன.

### தனிநாயக ஆய்வகம்

இத்தகைய ஆராய்ச்சிச் செல்வருக்கு மலேசியாவில், அவருடைய பெயரில் ஓர் ஆய்வகம் திறக்கப்பட வேண்டுமென கடந்த பல ஆண்டுகளாக நான் நினைத்து வந்தேன். என்னுடைய இந்த அவாவை மலேசியப் பேரவையின் துணைத்தலைவராய் விளங்குகின்ற டாக்டர் யோசப் ராஜுவிடம் 1084 சனவரியில் கூறினேன். அவர் என் திட்டத்தை வரவேற்றார்; ஆதரித்தார். எல்லா ஒத்துழைப்பும் தருவதாகக் கூறினார். 'ஈப்போவில்' தனிநாயக ஆய்வகத்தை நிறுவுவதே சிறந்தது என்றதுமல்லாமல் அதற்கான இடத்தையும் ஒதுக்கித் தந்துள்ளார். தற்காலிகமாக ''தனிநாயக ஆய்வகம்'' இங்கு இருக்கும். பின்னர் இன்னொரு இடத்திற்கு மாற்றப்படும். ''தனிநாயக ஆய்வகம்'' முதன்முதலில் மலேசியாவில், ஈப்போவில்தான் தோற்றுவிக்கப்பட்டது. அதன் பின்னர் அதன் கிளைகள் உலகின் பல நாடுகளிலும் உருவாக்கப்பட்டுள்ளன. ஈப்போவில் 19-02-84 இல் ''தனிநாயக ஆய்வகம்' தொடங்கி வைக்கப்பட்டது.

### தனிநாயக ஆய்வகத்தின் நோக்கம்:

தமிழ் இலக்கியப் பண்பாட்டுச் சிறப்புகளை இக்காலத்திற்கு ஏற்றவைகளாகச் செய்தல்:

**ஆய்வின் கருப்பொருள்கள் (பொது)**

1. தமிழ் இலக்கியம்
2. தமிழ்ப் பண்பாடு
3. தமிழ் மக்களின் வரலாறு
4. மானிட இயல்
5. தமிழ் மக்களின் வாழ்க்கைத் தத்துவம்
6. சமயம்
7. வழிபாட்டு முறைகள்
8. பழக்க வழக்கங்கள்
9. திருவிழாக்கள்
10. உணவு வகைகள்
11. பொழுது போக்குகள்
12. விளையாட்டுகள்

**சிறப்பு:-**

1. மலேசியாவில் தமிழர்களின் நிலை
2. மலேசியத்தமிழர்களின் பிரச்சினை
3. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை
4. தமிழர்களின் பொருளாதார நிலை
5. மலாய் நாட்டின் வளர்ச்சிக்குத் தமிழர்களின் பங்களிப்பு
6. மலேசியாவில் தமிழர்களின் வரலாறு
7. மலேசியாவில் வழங்கப்படும் பழமொழிகளும் விடுகதைகளும்
8. மொழி பெயர்ப்புகள்
   - அ. தமிழ் இலக்கியங்களை மலாய மொழியில் பெயர்த்தல்
   - ஆ மலாய் இலக்கியங்களை தமிழ் மொழியில் பெயர்த்தல்
9. தமிழ் வளர்ச்சியில் செய்தித்தாள்களின் பங்களிப்பு
10. மலேசியாவில் இந்துக்கள் வளர்த்த தமிழ் இலக்கியம்
11. மலேசியாவில் கிறிஸ்தவர்கள் வளர்த்த தமிழ் இலக்கியம்
12. மலேசியாவில் முஸ்லீம்கள் வளர்த்த தமிழ் இலக்கியம்

13. மலேசியாவில் வெளிவந்த சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள் பற்றிய ஆய்வு
14. மலேசியாவில் வெளிவந்த தமிழ் நூல்களின் பட்டியல் தொகுத்தல்.
15. மலாய்ப் பண்பாட்டில் தமிழ்ப்பண்பாட்டின் கூறுகள்
16. தென் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுடன் வாணிபத் தொடர்புகள்
17. நுண்கலைகள்
18. மலாய் நாட்டில் தோன்றிய நீதி இலக்கியங்கள்
19. வானொலி, தொலைக்காட்சி வளர்த்த தமிழ்
20. நாடோடி இலக்கியம், குழந்தை இலக்கியம் போன்றவைகள் ஆய்வு உறுப்பினர்கள்:

தமிழிலும் தமிழர்களிலும்ஆர்வம் கொண்ட தனிநபர்கள், நிறுவனங்களில் பிரதிநிதிகள் என்போர் சேரலாம். ஆய்வகத்தின் விருதுவாக்கு: தனிநாயக அடிகள் விரும்பிப் போற்றிய திருமூலரின் வாக்கு:

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

ஆய்வகத்தின் முத்திங்கள் ஏடு: ''தமிழ் மணம்''
தொடர்புக்கு முகவரி: இயக்குனர்,

" தனிநாயக ஆய்வகம் "
எண் 02 0ச, மொடான் இட்
ஈப்போ, மலேசியா.

---

தங்களிகர் நம் தமிழை
தரணியெல்லாம் கொண்டு சென்று
தன்னிகரில்லாப் பணி புரிந்த
தமிழ்முனி தனிநாயகத்தின்
தாள் தொட்டு வணங்கிடுவோம்
தரணி புகழ் பரப்பிடுவோம்
தமிழ்த் தாயே அகம் மகிழ
தவறாது நயத்திடுவோம்

---

ஆங்கிலம் வணிகத்தின் மொழியென்றால்
இலத்தீன் சட்டத்தின் மொழியென்றால்
கிரேக்கம் இசையின் மொழியென்றால்
ஜெர்மன் தத்துவத்தின் மொழியென்றால்
பிரஞ்ச் தூதிற்கான மொழியென்றால்
இத்தாலியம் காதலின் மொழியென்றால்
'தமிழ்' பக்தியின் மொழியாகும்

---

# தனிநாயகம் ஒரு தனிநாயகம்.

'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தியைச் செயலாளராகக் கொண்டியங்கிய 'தமிழ் வளர்ச்சிக் கழகம்' தனது நான்காவது தமிழ் விழாவை 1951 தைத் திங்கள் யாழ்ப்பாணம் பரமேசுவராக்கல்லூரியில் ( இன்றைய யாழ்வளாகம் ) சிறப்புற நடாத்தியது.

நான்கு நாட்கள் நடந்த விழாவில் பல அறிஞர்கள் சிறப்புரைகள் நிகழ்த்தினர். தமிழ் நாடு தூத்துக்குடியில் இறைபணியும் தமிழ்ப்பணியும் ஆற்றிக் கொண்டிருந்த தனிநாயக அடிகளாரும் அழைக்கப்பட்டிருந்தார்.

அடிகளாரின் சிறப்புரைக்கு 'சொல்லின் செல்வர் ரா.பி' தலைமை வகிப்பதாக இருந்தது. தலைவரோ உரிய நேரத்தில் வந்து சேரவில்லை. விழா அமைப்பாளர்கள் தலைவரின்றியே அடிகளாரை உரை நிகழ்த்துமாறு பணித்தனர்.

'சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள்' பற்றி அடிகளார் உரையினை ஆரம்பித்த சில மணித்துளிகளில் தலைவர் பேராசிரியர் ரா.பி அவர்கள் மேடைக்கு வந்து அடிகளாரின் உரையினைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

சிறப்புரையின் இறுதியில் "தனிநாயகத்திற்கு சபாநாயகம் தேவையில்லை. அவர் ஒரு தனிநாயகம்" என்று பாராட்டுரை வழங்கினார்.

**அன்றைய உரையில் ஒரு பகுதி..........................**

"நாம் இருப்பது இப்பெரு ஞாலத்தின் ஒரு சிறு மூலை. இஞ்ஞாலத்து மூலை முடுக்கின் கண்ணே, இத்துணை சிறந்த நாகரீகமும், வளமார்ந்த இலக்கியமும் தோன்றி வளர்ந்து செழித்து விளங்கிய புதுமை, சில வேளைகளில் நாமே நம்புதற்கியலாது போகின்றது. வானுற வோங்கி வளம்பெற வளர்ந்துள்ள இப்பனந்தோப்புக்களின் சூழ்நிலையில், உலகில் சிறந்து விளங்கிய இலக்கியம் ஒன்று இடம் பெற்று, எழுந்து, வளர்ந்து உருவாயிற்று என்று நம்புவது எளிதன்று."

"எமது இந்த ஈழநாட்டு நிலையையே பார்மின். வேற்று மொழியினரும், வேற்று நாட்டவரும் இக்கடல் சூழ் இலங்கையில் காலடி எடுத்து வைக்கும் முன்னரே, தமிழர் இங்கு வாழ்ந்துள்ளனர். தமிழ் மொழி இங்கு பரவிப்பண்புயர்ந்து நின்றிருக்கிறது. ஆயினும், இன்று எழுதிக் குவிக்கப் பெறும் எண்ணற்ற வரலாற்றுச் சுவடிகள், தமிழர் பிற்காலத்தில் குடியேறிய மக்கள் என்றே பிழைபடக் கூறி வருகின்றன..................தமிழராகிய நாமும், நமது இந்திய மொழிகளிலேனும் நம் தமிழைப் பற்றிய உண்மைகளை இதுகாறும் கூறினோம் அல்லேம்"

"மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்
பொய்போ லும்மே பொய் போலும்மே!

பொய்யுடை யொருவன் சொல்வன்மையினால்
மெய்போ லும்மே மெய் போலும்மே!

ஆதலின், உலகம் நம்மை உணராமலும், நாமே நம்மை உணராமலும், பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும் இகழ்ச்சிசொலப்பான்மை கேட்டு நாமமது தமிழர் எனக் கொண்டிங்கு, உயிர் வாழ்ந்து வந்துள்ளோம்"

– தனிநாயகம் –

# தனிநாயக அடிகளார் பற்றி இவர்...

''எமது பல்கலைக் கழகம்' இந்திய கலாசாரவியல்' பலமொழிகளில் பாண்டித்தியம் பெற்ற விரிந்த மனப்பான்மை உடைய ஓர் அறிஞரைத் தலைவராகப் பெற்றது எமது பல்கலைக் கழகத்தின் பெரும்பேறாகும். நான் இங்கு குறிப்பிடுவது பேராசிரியர் தனிநாயக அடிகளாரையே ஆகும். அவருடைய தலைமைதான். தமிழாராய்ச்சி மாநாட்டை இங்கு கூட்டுவதற்கு வழிவகுத்ததாகும்.

மலேசியாவில் நடைபெற்ற முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டில் மலேசியப்பிரதமர் துங்கு அப்துல் ரகுமான்

---

மனிதப் பண்பிலிருந்து பிறக்கும் ஓர் இயல்பு பிறரன்பு. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்னும் இலட்சியம் எக்காலத்திலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுவே சான்றோருடைய பெரும் இயல்பு. என்கடன் பணிசெய்து கிடப்பதே எனப் பிற்காலத்தில் கூறப்பட்டுளளது.

இவ்வுலகம் உறுதியாக நிலைத்திருப்பதற்கு இத்தகைய கொள்கையுடைய சான்றோர் இருப்பதே காரணம். இந்த நூற்றாண்டில் சாதிவேற்றுமைகளை ஒழிக்க வேண்டும் என்றும் விளக்கும் இயக்கங்கள் இக்கொள்கையிலிருந்தே தோன்றின. பிறருக்குப் பணி செய்யும் மனநிலை இப்பண்பின் பயனே.

தனிநாயகம் அடிகளார்

# தவத்திரு தனிநாயகம் அடிகளார்

## நினைவு மன்றக் குழு

**தலைவர்:-** அருட்திரு *T.* பயஸ்பத்மராஜா அடிகள்
*புனித மரியாள் பேராலயப் பங்குத் தந்தை*

**செயலாளர்:-** திரு. தாபி. சுப்பிரமணியம்
*புனித வளனார் வித்தியாலய அதிபர்*

**உறுப்பினர்கள்:-**

1. திரு. *N.* புகேந்திரன் அவர்கள்
*திருமலை மேலதிக அரசாங்க அதிபர்*

2. திரு. *S.* எதிர்மன்னசிங்கம் அவர்கள்
*வடகிழக்கு மாகாண கலாசாரப் பணிப்பாளர்*

3. '*தமிழ்மணி*' திருமதி பா. நல்லரட்ணசிங்கன்

4. அருட்செல்வி *M.* தெரேஸாராணி *A. C.*
*புனித மரியாள் கல்லூரி அதிபர்*

5. திரு. *J. S.* கைடி பொன்கலன்
*புனித சூசையப்பர் கல்லூரி அதிபர்*

6. திரு. வ. தங்கவேல்
*புனித பிரான்சிஸ் சவேரியார் ம. வி. அதிபர்*

7. திரு. *J.* நோமன் பல்தஸார்
*சேவைக்கால ஆலோசகர் - றோ. க*

8. திரு. எஸ். ஜோஸப்
*நாமகள் வித்தியாலய அதிபர்*

9. செல்வன் ஜெ. பிரிமஸ் பெலிஸியன்

# திருமலையில் நடைபெற்ற முன்னைய நிகழ்வு

# தமிழ்த்திரு தனிநாயகம் அடிகளார்

## நினைவு தின விழா

**இடம்:** இந்துக்கல்லூரி, திருக்கோணமலை

**காலம்:** 02-11-1980 ஞாயிறு மாலை 6-00 மணி

**தலைமை:** திரு. இரா. சம்பந்தன் *(பா. உ)*

**அடிகளார் உருவத்திற்கு மலர் மாலை அணிவித்தல்**
செல்வி. சரஸ்வதி சுவாமி நாதன்
*நகராளு மன்றத் தலைவி*

**தமிழ் வணக்கம்:** ஸ்ரீ சண்முக வித்தியாலய மாணவிகள்

**வரவேற்புரை:** அருட்திரு ஜே. எஸ். அரசரத்தினம்
*புனித குவாடலூப் ஆலயம்*

**தலைமையுரை:**

**புகழ் அஞ்சலி:** திரு. பெ. பொ. சிவசேகரம் *கழகப்புலவர்*

**உரைகள்:** ஜனாப் *O. L. M.* இஸ்மாயில் *சட்டத்தரணி*
புலவர். வை. சோமாஸ்கந்தர்
செல்வி. செல்வமணி வடிவேலு (*C. E. O.*)
திரு. தாபி. சுப்பிரமணியம்
*நகராளுமன்ற உப தலைவர்*

**சிறப்புரைகள்:** அருட்திரு அழகரசன் அடிகள் *(MA phd)*
புலவர். *A. W.* அரியநாகம்
திரு. ராஜன் பிலிப்புப் பிள்ளை *பொறியியலாளர்*
திரு. ஆர். தேவராஜன்

**நன்றியுரை:** திரு. க. அருள்சுப்பிரமணியம்

# நன்றி மறப்பது நன்றன்று!

தனிநாயகனாய் நின்று நம்தமிழ் பெருமைதனை
தரணியெங்கும் தூது கொண்டு சிறப்பித்து நின்ற
தனிநாயக அடிகளார் தம் மாட்சி நயக்கவென
தரமான விழாவொன்றால் பூசித்துப் போற்றவென
உரமான மலரொன்றால் அர்ச்சித்து மகிழவென
தனயர் நாம் சிந்தித்துச் செயற்பட்ட நாளீன்று
ஆதரவு தந்திட்ட அன்பர்கள் நண்பர்கள்
ஆர்வமுடன் ஒத்துழைத்த ஆட்சி மன்ற அலுவலர்கள்
வாழ்த்துரைகள் வழங்கிய அன்பு நிறை ஆயருடன்
பிரதம செயலர், மேலதிக அரச அதிபர், பணிப்பாளர்கள்
கல்விச் செயலர், மாகாணப்பணிப்பாளர் என்போர்
ஆலோசனை வேண்டிய போதன்பும் ஆதரவும்
அளித்தெம்மை ஊக்குவித்த "குழு" உறுப்பினர்கள்
"முகப்பட்டை" உதவிய கூட்டுறவுச் சங்கத்தார்
மலர்நிதி வழங்கிய கல்விச் செயலர்
முகமலர்ச்சி கொண்டு கலை நிகழ்ச்சி தந்திட்ட
கல்லூரி அதிபர்கள் ஆசிரியர் மாணவர்கள்
அவசிய நிதித் தொகையினை தந்திட்ட
அரச னர்பற்ற அனைத்து தொண்டர் நிறுவனங்கள்
குறிப்பிட்ட திகதிக்குள் மலராக்கித் தந்திட்ட
'பிறைட்' அச்சக மேலாளர் தொழிலாளர்
மண்டபம் தந்து ஒழுங்குகள் செய்திட்ட
உத்தமனார் சூசைமுனி கல்வியக அதிபர்
நாயகன் புகழ்பரப்பல் நம்பணி யென்று
நாளிலும் பொழுதிலும் நம்மைத் தூண்டி நின்ற
மேலதிக அரச அதிபர், கலாசார பணிப்பாளர்
கூறிய கூற்றுகள் யாவரின் காதினில்
மாறிவிடாது நின்றொலிக்கத் துணை நின்ற
'நாமகள் ஒலி' மன்றத்தினர், மற்றும் பலர்
இத்தனைக்கும் மேலாக எமை வழி காட்டி நிற்கும்
நித்தனவன் இறைவன் தாளினைப் போற்றி
அத்தனை பேருக்கும் மாட்சி நயப்பு மலரின்
ஆசானென் மனமார்ந்த நன்றிகள்.

**வணக்கம்**

**தாபி - சுப்பிரமணியம்.**

பிரைட்ஸ் அச்சகம், திருக்கோணமலை.